1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு சித்திரை மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 14-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### அரசாங்கத்தின் இராசினாமா

இன்றுவியாழக்கிழமை சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் தமது அரசாங்கத்தின் இராசினாமாவைக் கவர்னர்–ஜெனறலிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றார். அவ்வாறு சமர்ப்பித்தபின் புதிய அரசாங்கத்தை அமைக்கும்படியாய் மக்கள்ஐக்கியமுன்னணியின் தலைவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களைக் கேட்குமாறு கவர்னர்–ஜெனறலுக்கு ஆலோசனைகூறுவார். அவ்விதம் கூறிவிட்டு அவர் இராணிமாளிகையிலிருந்துவெளியேறியஒருமணித்தியாலத்தின்பின் கவர்னர்-ஜெனறல் திரு. பண்டாரநாயக அவர்களை வரவழைத்துப் புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக்கொள்வார். நாளைவெள்ளிக்கிழமை திரு. பண்டாரநாயகவின் மந்திரிசபை விசுவாசப்பிரமாணஞ் செய்துகொள்ளும்.

### பாராளுமன்ற முதற்கூட்டம்

பாராளுமன்றப் புதியசனப்பிரதிநிதிகள்சபை முதன்முறையாக நிகழும் சித்திரைமாதம் 19-ந்திகதிவியாழக்கிழமைகூடிப் புதியசபாநாயக (ஸ்பீக்கர்) ரையும், உதவிச்சபாநாயகரையும், கம்மிற்றிகளின் உதவித்தலைவரையும் தெரிவுசெய்யும் புதியபிரதிநிதிகள் அன்றுதினமே விசுவாசப்பிரமாணஞ் செய்துகொள்வார்கள். இம்மாதம் 20-ந்திகதியன்று இலங்கையின் மூன்றாவதுபாராளுமன்றமாகிய புதியபாராளுமன்றம் வழமைபோல ஆடம்பர வைபவங்களுடன் திறந்துவைக்கப்படும்.

### யாழ்ப்பாணமும் தேர்தலும்

யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலும் சென்ற 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை பொதுத்தேர்தல் அதிகமான ஆர்ப்பரிப்புகள், ஆரவாரங்கள் இல்லாமல் மிகஅமைதியாக நடைபெறலாயிற்று. கவலைக்கிடமான எத்தகைய சம்பவமோ, அன்றேல் வீதியில் ஏதும் விபத்தோ நடைபெறாமல் இந்தத்தேர்தல் நடந்துமுடிந்தமை சந்தோஷமே. பொலிசாரும் தேர்தல் அமைதியாக நடைபெறத்தக்கதாய்த் தகுந்தநடவடிக்கைகள் எடுத்து, மிகவிழிப்பாக நடந்துகொண்டமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

### புதியமந்திரிசபை

மக்கள் ஐக்கியமுன்னணியின் தலைவரான திரு. எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்கள் இன்று வியாழக்கிழமை தமது மந்திரிசபை பற்றிய விபரங்களைக் கவர்னர்–ஜெனறல்சேர் ஒலிவர் குணதிலக அவர்களிடம் சமர்ப்பிப்பாரெனத் தெரியவருகிறது. இதுவரை இருந்துவந்த மந்திரிமாரைக் காட்டிலும் குறைந்ததொகையினரே இவரின்புதியமந்திரிசபையில் இருப்பார்களென்றும், வீண்செலவுகளைக் குறைப்பதற்காகவே மந்திரிமாரின் தொகை குறைக்கப்படுகிறதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### தேர்தல்முடிவு கண்டுதான்

தமதுபதவியிலிருந்து விலகிச்செல்லும் பிரதமர் தம்முடையமந்திரிசபையின் இராசினாமாவைச் சமர்ப்பிக்குமுன்னமோ, அன்றேல் தேர்தல்கம்மிஷனரது கையொப்பத்தின்கீழ் அதிகாரபூர்வமான தேர்தல்முடிபுகள் கெசற்றில் வெளிவருமுன்னமோ புதியஅரசாங்கத்தை அமைக்க எவரையுமே அழைப்பதற்குக் கவர்னர் - ஜெனறல் நடவடிக்கை எடுக்கமாட்டார். ஆனால், நேற்றைத்தினம் தேர்தல்முடிபுகள் பூரணமாக வெளிவந்திருப்பதாலும், இன்று சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் தமதுஅரசாங்கத்தின் இராசினாமாவைச் சமர்ப்பிக்கவிருப்பதாலும் கவர்னர்-ஜெனறலுக்குள்ள தடைகள் நீங்குகின்றன.

### மாணவனின் பரிதாபமரணம்

மானிப்பாய், அமெரிக்கமிஷன்பாடசாலைத் தலைமையாசிரியரான திரு. ஐ. மாணிக்கவாசகர்அவர்களின் புதல்வனை எட்டுவயதுடைய பாடசாலைப் பாலியன் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று சாவகச்சேரித் தொகுதிக்குத் தமிழரசுக்கட்சி அபேட்சகரான திரு. வி. என். நவரட்ணம்அவர்கள் தனது வீட்டின்முன்புறமாய் ஊர்வலமாக அழைக்கப்பட்டுச் சென்றபோது அவருக்கு மாலைசூட்டிவிட்டுத் தனதுவீட்டைநோக்கிச் சட்டெனறெயிற்பாதையைத்தாண்டிப் பாய்ந்துசென்றபோது பளையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த றெயின்வண்டியால்மோதுண்டு கடூரகாயமடைந்தான். அவன்உடனே தானே ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசெல்லப்பட்டபோதிலும் அங்கே இறந்துபோயினன்.

### மட்டக்களப்புச் சுப்பிறீங்கோடு

நீதியரசர் வசிப்பதற்குத்தகுதியான வங்களாஒன்று கிடைக்கவில்லையென்ற காரணமாக மட்டக்களப்பில் நடந்துவந்த சுப்பிறீங்கோட்டினைத் திரிகோணமலைக்கு மாற்றுவதை ஆட்சேபிக்குமுகமாக மட்டக்களப்புப் பட்டினசங்கதலைவர் டக்றர் ரி. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் சென்ற 9-ந்திகதியன்று ஓர்பொதுக் கூட்டம் நடைபெறலாயிற்று. ஆங்கிலநீதியரசர்கள் சுப்பிறீங் கோடுகளை நடத்தியகாலத்தில்தானும் இத்தகையஓர்பிரச்சினை ஏற்படவில்லையென்றும், சுப்பிறீங்கோட்டுவிசாரணையைத் திரிகோணமலையில் நடத்துவதால் அனைவருக்குமே அனாவசியமான செலவுகளும், வசதிக்குறைவுகளும் ஏற்படுகின்றனவென்றும் அவ்வேளை சுட்டிக்காட்டப்பட்டது. ஈற்றில் மட்டக்களப்பிலே சுப்பிறீங்கோட்டு நீதியரசர்கள் வசிக்கத்தகுதியான வங்களாஒன்றை அமைப்பதற்கு உடனடியாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக்கேட்டு ஓர்பிரேரணை ஏகமனதாக அரங்கேறப்பட்டது.

### காணித்தகராறும் கொலையும்

எகெலியகொடையிலே ஓர்காணித்தகராறு ஏற்பட்டகாரணமாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை உண்டானகலகத்தில் எச். எம். பொடிபண்டா, ஜயசிங்காபண்டா எனுமிருஆடவர் மரணமடைய, குமரிஷா எனும்பெண் பெருங்கத்திக்காயங்களுக்குள்ளாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாளெனச் சொல்லப்படுகிறது. வெலிவெரியா எனுமிடத்தில்ஏற்பட்ட மற்றோர்காணித்தகராறு காரணமாய் உண்டானகைகலப்பில் எச். எஸ். பெரேரா என்னுமொருவர் குற்றிக்கொல்லப் பட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

### சபாநாயகரின் வாசஸ்தலம்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் ஸ்பீக்கர்—அதாவது சபாநாயகரின் அதிகாரபூர்வமான வாசஸ்தலம் கொழும்பிலுள்ள 'மும்தாஸ் மஹால்' என்பது. இதுவரை சபாநாயகராகப் பதவிவகித்திருந்தவரான சேர் அல்பேட் பீரிஸ்அவர்கள் புதிய பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தமையால் புதிய சபாநாயகருக்கு இடம்விட்டுக் கொடுக்குமாறு சென்றதிங்கட்கிழமை அதனைக் காலிசெய்து விடலாயினர். இதில்வசித்த இரண்டாவது சபாநாயகர் இவரே. முதலாவது சபாநாயகர் சேர் பிரான்சீஸ் மொலமூறே அவர்களே.

### பிரதமரின் வாசஸ்தலம்

இலங்கைப்பிரதமரின் அதிகாரபூர்வமான வாசஸ்தலம் கொழும்பிலுள்ள "ரெம்பிள் றீஸ்" என்ற பெருமனையாகும். இந்தமனையிலே இதற்குமுன் திரு. டி. எஸ். சேனநாயக, டட்லி சேனநாயக எனும்இருவரும், இவர்களைத் தொடர்ந்து இதுவரை சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களும் இதில் வசித்திருந்தார்கள். ஐக்கிய தேசியக்கட்சி பொதுத்தேர்தலில் பெருந்தோல்வியடைந்த காரணமாகச் சேர் ஜோண் அவர்கள் இதனை விட்டுவிலகப் புதிய பிரதமராக வரவிருக்கும் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகஅவர்கள் இனிமேல் இதில் வதியவிருக்கின்றார். இவர் வசிக்கத்தொடங்கியதும் இதற்குமுன் இல்லாதவகையிலே இது பிள்ளைகளால் பரிமளிக்கவிருக்கின்றது. ஏனெனில், இவருக்கு இரு இளவயதுள்ள புத்திரிகளும், ஒரு புத்திரனும் இருக்கிறார்கள்.

### வ-கீ-மாகாணப் பிரதிநிதிகள்

புதியபொதுத்தேர்தலிலே வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலுமுள்ள பதினாறுதொகுதிகளுக்கும் பிரதிநிதிகளாகத் தெரியப்பெற்றிருப்பவர்களின் நாமங்கள்வருமாறு:

1. யாழ்ப்பாணம்—திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்—தமிழ்காங்கிரஸ்
2. ஊர்காவற்றுறை—திரு. வி. ஏ. கந்தையா—தமிழரசு.
3. காங்கேசன்துறை — திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்—தமிழரசு.
4. பருத்தித்துறை—திரு. பி. கந்தையா—கம்யூனிஸ்த்.
5. வட்டுக்கோட்டை—திரு. ஏ. அமிர்தலிங்கம்—தமிழரசு.
6. கோப்பாய் — திரு. சி. வன்னியசிங்கம்— தமிழரசு.
7. சாவகச்சேரி—திரு. வி. என். நவரத்தினம்—தமிழரசு.
8. வவுனியா—திரு. சி. சுந்தரலிங்கம் —அ. த. முன்னணி
9. மன்னார்—திரு. வி. ஏ. அழகக்கோன்—தமிழரசு.

* * *


1. திரிகோணமலை—திரு. என் ஆர். இராசவரோதயம்—தமிழரசு.
2. மூதூர்—ஜனாப் எம். ஈ. எச். முகமதலி—சுயேச்சை.
3. கற்குடா—ஜனாப் ஏ. எச். மாக்கான் மரைக்காயர்—சுயேச்சை
4. பொத்துவில்—ஜனாப் எம். எம். முஸ்தவா—தமிழரசு.
5. பட்டிருப்பு—திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம்—சுயேச்சை.
6. மட்டக்களப்பு—திரு. எஸ். இராசதுரை—தமிழரசு.
7. கல்முனை— அரசவாசல்முதலியார் எம். எஸ். காரியப்பர்—தமிழரசு.

### எதிர்க்கட்சித் தலைவர்

பாராளுமன்றப் பிரதிநிதிகளாகத் தற்போது தெரியப்பெற்றிருக்கும் தமிழ்ப்பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஐக்கியப்பட்டுக்கொண்டால் ஓர்தமிழரே எதிர்க்கட்சித்தலைவராய் இருப்பாரெனத் தென்மராட்சி மகாசனசபையின் தலைவரான திரு. வி.எஸ். கார்த்திகேசு அவர்கள் அன்று பாணியில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதபோதகநாடுகளின் குரலொலி



"இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன்சகோதரன் கஷ்டப்படுகிறதைக் கண்டும் அவனுக்கு இரங்காமல் தன்னுள்ளத்தை மூடிக்கொண்டால், தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி?" (I அரு 3:17.)

**(வேதப்பரப்புதல் சபையின் தேசிய தலைவரான வண. முத்துக்குமாரு சுவாமியார்அவர்கள் சென்ற வெளியீட்டில் தெரிவித்த விஷயச்சுருக்கம்.)**

பரிசுத்தவாரம் சென்றுவிட்டது. அவ்வாரத்தில் எங்கள்மீட்பரின் அந்திய வாழ்க்கையைத் தியானித்தோம். இன்று அவருடைய மகிமைப்பிரதாபமான உத்தானத்தைக் கொண்டாடுகிறோம்.

ஒரேஒரு ஆத்துமத்தின் மதிக்கரிய கிரயம் எவ்வளவென்று குறிக்கும் காலங்களுள் பெரியவெள்ளிக்கிழமையே முக்கியம்பெற்றது. அந்நாளே கத்தோலிக்கரின் வேண்டாவெறுப்பு, அற்பதனம் எவ்வளவென்பதையும் காட்டுகின்றது. ஆகவே, அந்நாளே ஒவ்வோர் கத்தோலிக்கனும் கிறீஸ்துநாதரின் அப்போஸ்தலனாக மாறவேண்டுமென்ற கடமையையும் ஞாபகப்படுத்துகின்றது.

உத்தானத்தின் பின்வரும்நாட்கள் அக்கடமையைப்பற்றி ஆழயோசிக்க வேண்டியநேரம். கிறீஸ்துநாதர் மனிதர் எல்லோருக்காகவும் தமது உதிரத்தைச்சிந்தி, சிலுவையில்மரித்து ஈடேற்ற அலுவலை முடித்தருளினார். ஒவ்வோர்ஆத்துமத்துக்கும் அவர் அத்தனைவிலை கொடுக்கவேண்டியதாயிற்று. தமது அளவில்லாத அன்பை எங்கள் மேல் பொழிந்தார். கிறீஸ்தவர்களாகிய எங்களுக்கு விசுவாசக்கொடையை அருளினார். ஆகவே, அவருடைய திருஇரத்தம் எங்கள் கையிலிருக்கின்றது. அதைக்கொண்டு என்னசெய்தோம் — நீரும், நானும், மற்றவர்களும்?

அத்தகையகொடையை வெதுவெதுப்பு, வேண்டாவெறுப்பு என்னும் அங்கிகளுக்குள் மறைத்து வைத்தோமோ அல்லது அவரிடம் நாம்கொண்டுவாவிருக்கும் கோடாகோடி அஞ்ஞானிகளுக்காக—யேசுநாதரின் ஞானச்சரீர உறுப்புகளுக்காக—செபம், தபம், பரித்தியாகம் பண்ணுகிறோமோ? அஞ்ஞானிகளைக் கரைசேர்க்கிற அப்போஸ்தலிக்க அலுவலை நினைக்கிறோமோ? அல்லது கல்வாரியில் சிலுவையில் பீறிக்கிழித்துத் தூங்கும் சரீரத்தைப் பார்க்காதபடி கண்களை மூடிக்கொள்ளுகிறோமோ?

வேதப்பரப்புதல்வேலையில் ஈடுபடவேண்டிய சகல கிறீஸ்தவர்களையும் விசேஷமாய் வாலிபரை ஆவலோடு அழைக்கிறோம். இவ்வலுவல் நீங்கள் பெற்ற விசுவாசத்தின் ஓர்கடமையென்பதை நினைப்பூட்டுகிறோம். இதை ஓர் பத்திக்கிருத்தியம் என்று நினையாதீர்கள். உங்கள்மேல் சுமத்தப்பட்ட ஓர் பெரும் கடமைஎன்று உணர்வீர்களாக. கோடிக்கணக்கானோர் இன்னும் கிறீஸ்துநாதரைப்பற்றி அறியாமலிருப்பது துயரம். கிறீஸ்துநாதரை அறிந்தும் வேண்டாவெறுப்பாயிருப்பது அதிலும்துயரம்.

எங்கள் செகமீட்பரின் உத்தானத்தோடு நீங்களும் புத்துயிர்பெற்று, வேதப்பரப்புதல்கடமையைப் பன்மடங்கு நேசித்து அதற்காக முன்னிலும்அதிக வேகமாய் உழைப்பீர்களென நம்பியிருக்கிறோம். உத்தானமான எங்கள் நாயகன் உங்களை ஏராளமாய் ஆசீர்வதிப்பாராக.

## கிறீஸ்துநாதருக்கு நீங்களும் தேவை

குருத்தோலை ஞாயிறு அன்று எமது இரட்சகர் தமது இரு சீஷர்களைப் பார்த்து: "பெத்தானியாவிலிருந்து ஜெருசலேமுக்குப் போகிறவழியால் போங்கள். ஓர் மனிதன் ஓர் கழுதையோடு நிற்பதைக் காண்பீர்கள். அவனிடம் 'எசமானுக்கு இது தேவை' என்று சொல்லுங்கள்" என்றுசொன்னார்.

தாம் ஆரவாரத்தோடு ஜெருசலேமுக்குள் பிரவேசிக்க அக்கழுதை தேவையாயிற்று. ஆனதால் அக்கழுதை எசமானுக்குத் தேவை என்று மாத்திரம் சொல்லக்கட்டளையிட்டார். அது சொந்தக்காரனுக்குத் தேவையாயிருக்கும். அவர் தாமதிக்கலாம் அல்லது வேறுநியாயங்கள் சொல்லலாம். இவையெல்லாவற்றையும் தவிர்த்து அதுதமக்குத் தேவைஎன்றுமாத்திரம் சொன்னதை அவதானியுங்கள். யேசுநாதர் எங்களிடமும் தமக்குஏதோ தேவைஎன்று கேட்கும்பொழுது நாமும் சாட்டுப்போக்குகள் சொல்லாமல் கேட்டதைக்கொடுக்க அவருக்குஎல்லாத்திலும் அமைவது கடனென்று படிப்பிக்கிறார். மேலும், தமதுதேவை முடிந்ததின்பின் அக்கழுதையைச்சொந்தக்காரனிடம் கொடுத்துவிடவுங் கருத்துள்ளார்.

யேசுநாதரின் உத்தானத்தின்பின் சொந்தக்காரன் எவ்வளவுசந்தோஷ ஆர்ப்பரிப்புடன் எசமான் ஜெருசலேமுக்கு எழுந்தருள நான்எனது கழுதையைக் கொடுத்தேனென்று மகிழ்ந்திருப்பான்.

எங்கள்கல்வி, பணம், பரித்தியாகம் ஆதியவற்றை ஆண்டவருக்குக் கொடுத்தால், அவைகளைத் திரும்பஎங்களுக்குத்தருவார். ஏராளமானபலனை — எங்களைஆனந்தத்தால் பூரிப்பதுமான பலனை இம்மையிலேதருவார். ஆகவே, எங்கள்மீட்பர்கேட்பதை மறுக்காது, சந்தோஷமாய்க்கொடுக்க ஆயத்தமாய் இருக்கக்கடவோம். ஆசியாவிலோ, ஆபிரிக்காவிலோ அல்லது எப்பகுதியிலோ சர்வேசுரனுடைய இராச்சியம் பரம்ப உங்கள் செபம், தபம், பணம் முதலியவைகளை அர்ப்பணம்பண்ணும்படி அவர்கேட்கிறார். அவைகளை ஒரு கைம்மாற்றாகவும், பெரும்வட்டியோடு திரும்பப்பெறும் முதலாகவும் நம்பிக்கையோடு கொடுக்கத் தாமதிக்கலாகாது.

## விருத்தியாளர் தேவை!!

விருத்தியாளர் என்பது யார்?

ஆரம்பத்தில் வேதப்பரப்புதல்சபை பத்துப்பேர்கொண்ட பந்திகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தப்பத்துப் பேர்கொண்ட பந்தியின்தலைவருக்குத் தான் விருத்தியாளர் என்றுபெயர்.

அவர்கள் கடமையென்ன?

1. தகுதியுள்ளவர்களைக் கட்டளைச் சுவாமியாரிடம் கூட்டிக்கொண்டு போய்ச் சபையில்சேரச்செய்து அவர்களுக்கு ஓர்அங்கத்தவரின் பத்திரம் பெற்றுக்கொடுப்பது.

2. இந்தப் பத்திரத்தை அவர்கள் கவனமாய் வைத்திருக்கிறார்களோவென்று விசாரித்து, அங்கத்துவத்தின் கடமைகளை அனுசரிக்கிறார்களோவென்றும் விசாரிப்பது.

3. மாதத்துக்குமாதம் அல்லது தவணைக்குத்தவணை பணத்தை வசூல் பண்ணிக் கட்டளைச் சுவாமியாரிடம் கொடுப்பது.

இன்னும் அவர்கள் செய்யத்தக்கது என்ன?

அங்கத்தவர்கள் பரிபூரணபலன் அடையக்கூடிய தினங்களை அவர்களுக்கு நினைப்பூட்டிக் கூடுமாகில் பந்திகூட்டமாகப் பூசைகண்டு சற்பிரசாதம் பெறச்செய்வது.

மாதாந்தம் பத்திரிகையில்வரும் விஷயத்தைப் பந்தியில் உள்ளவர்களுக்கு வாசித்து விளங்கப்படுத்துவது.

மாதாந்தம் புதிய அங்கத்தவர்களாய்ச் சேர்வோரின் நாமங்களை விசுவாசப் பரப்புதல்சபைத் தலைவருக்கு அனுப்பிவைப்பது.

**சில சிந்தனைகள்:**

அன்றொருநாள் நான் ஒருவயோதிப குருவானவருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அவர் சொன்னதாவது: அமெரிக்காமுழுவதும் கத்தோலிக்கநாடாய் வரவேண்டும், ஏனெனில், அது எல்லாநாடுகளிலும் அதிக முற்போக்கானது. அந்த நாடு கத்தோலிக்கநாடாய்இருந்தால் எல்லா நாடுகளும் கத்தோலிக்கமயமாய் மாறும்.

இங்கிலாந்துமுழுவதும் கத்தோலிக்கநாடாய் வரவேண்டும். ஏனெனில், அந்தநாடு உலகத்தில் எல்லா நாடுகளிலும்பார்க்கச் செல்வாக்கால் கூடியது. செல்வாக்குரிய நாட்டின் நன்மதி எங்கும்செல்லும்.

ஆனால், இப்போது உலகம்இருக்கும் நிலை — ருஷியா பாழாய்ப்போய் விட்டது. அதைச் சுற்றியிருக்கும் தேசங்களும் அப்படியே. பிரான்ஸ் நிலையற்றதாய் இருக்கிறது. சீனதேசம் முழுவதும்பாழ். இந்தியா இலங்கை அஞ்ஞானம். ஆ! ஆ! தேவனை அறியாதவர், நேசியாதவர் அனந்தம். உலகத்துக்காக அதிகம் மன்றாடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு திரும்பவும் தான்சொன்ன செபமாலையைத் தொடர்ந்து சொல்லப்போனார்.

இந்தவருடம் தேவ அழைத்தல்களின்வருடம். மிஷனரிமார் இங்கும் எங்கும் அதிகம் தேவை. இன்றைக்கு நீ ஒரு நல்ல பையனைப்பார்த்து, தம்பி! நீ ஒரு குருவாய் வரமாட்டாயா? என்று கேள். இன்று நீ விதைக்கும் வித்து ஒருநாள் பலிக்கவும்கூடும்.

**மரியாயின் சேனையைச் சேர்ந்தவர் விருத்தியாளர் ஆகலாமா?**

பணம் சேகரிப்பது அச்சேனைக்கு விலக்கப்பட்டதாயினும் விசுவாசப்பரப்புதல்சபைக்குச் சேர்வது விலக்கப்படவில்லை. ஆகையால், அவர்கள் விருத்தியாளராகலாம்.

## பரித்தியாகக் கோணம்

**கொழும்பு:**

இதற்குள் நான்அனுப்பும் பணம், பரிசுத்தபிதாவின் 80-வதுபிறந்தஆண்டின் ஞாபகத்துக்காக. வேதப்பரப்புதல்சேவை நாளாந்தம் திடம்கொள்வதாக.

**மன்னார்:**

ஞானோபதேச வகுப்புநேரம் எம் கன்னியாஸ்திரீ பரித்தியாகக்கோணத்தின்சிலபகுதிகளை வாசித்துக்காட்டினா. நான் வீடுசென்றபொழுது அதைஎன் தாயாருக்குச் சொன்னேன். அவவின் அனுமதியோடு ஓர்உண்டியல் தொடங்கினேன். என்சகோதரர், சகோதரிகள் ஒவ்வொருநாளும் தங்களாலியன்றதை அதற்குள் போட்டார்கள். சேர்ந்த பணத்தை அனுப்புகிறேன். இதைத் தயவாய் ஏற்றுக்கொள்ளும். மாதாந்தம் அனுப்பநினைத்திருக்கிறேன்.

**நீர்கொழும்பு:**

பரித்தியாகக்கோணத்தை வாசித்த நாள்முதல் ஏதோசொற்ப உதவிசெய்ய வேண்டுமென்று கருத்துள்ளேன். சாப்பாடுமுதலிய அவசரமான செலவின் பின் எனது சம்பளத்தில் மிஞ்சுவது மிகவுஞ்சொற்பம். இம்மாதம் சிலபரித்தியாகம்செய்து வேதப்பரப்புதலுக்காக இச்சொற்பபணத்தை அனுப்புகிறேன். மாதாந்தம் இதைச்செய்வேனென நம்புகிறேன்.

**பொறளை:**

பரிசுத்தபிதாவின் சபைக்காக இத்துடன் சொற்பபணம் அனுப்புகிறேன். சென்றமாசமும் அதேயளவான தொகை அனுப்பினேன். ஆனால், அது ஓர்உண்மையான பரித்தியாகமாகத் தோன்றவில்லை. இம்முறை இதுஓர் பரித்தியாகச்செயலே.

**கவனிப்பு:**

எம்தமிழ் நாடுகளிலிருந்து இவ்விதமான பரித்தியாகச் செயல்களைக் காணோம். எம்மவர்இப்பக்கத்தை வாசியார்போலும். வேதம் பரம்பவேண்டுமென்றஆசை இன்னும் பிறக்கவில்லையா? அல்லது எழுதிஅனுப்பச் சோம்பலோ, கூச்சமோ. பரித்தியாகங்களைச் செய்யும்போது அவைகளை: National Director, Propagation of Faith, Bishop's House, Chillaw அல்லது Diocesan Director, Propagation of Faith, Bishop's House, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். உங்கள் முகவரியையும் தெளிவாய்எழுதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### மிஷனரிமாருக்குப் பாராட்டுரை

தாய்லாந்தென அறியப்படுகின்ற சியநாட்டின் ஒன்பதாவதுஇராமாஅரசர் தமதுநாட்டிலே சலேசியன் சபையைச்சேர்ந்த மிஷனரிமார் ஆற்றிவருகின்ற கல்வித்தொண்டையும், சமூகத் தொண்டையும் பிரசித்தமாகப் புகழ்ந்துபாராட்டியிருக்கின்றார். விசேஷமாய் இளம்மாணவர்கள் பேராலும், இளந்தொழிலாளர்கள்பேராலும் செய்துவருகின்ற நிர்மாணவேலையையும், பிறபணிகளையும் வெகுவாகப்பாராட்டிக் கொண்டார். சலேசியன் சபைக் குருமாரும், பிறதர்மாரும் தாய்லாந்திலே கடந்த சுமார்30 ஆண்டுகளாகப் பணியாற்றிவருகின்றார்கள்.

### மேற்றிராணியாரும் குருவானவரும்

சீனவிலே ஹொங்யாங்நகரின் யோசெவ் உவான்மேற்றிராணியாரும், அவரின் விக்கார்ஜெனறலான வண. சாய்ங்சுவாமியாரும் சிலவாரங்களின்முன் கம்யூனிஸ்தர்களாலே கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்களென்று ஹொங்கோங்கிலே செய்தி கிடைத்திருக்கிறது. ஹொங்யாங் மேற்றிராசனத்திலுள்ள 12,000 கத்தோலிக்கரும் தங்களை விசாரணைசெய்யப் பத்துக்குருமார்வரையிலேயே இன்னமும் கொண்டிருக்கிறார்கள். பெருங்கஷ்டங்கள் மத்தியிலேயே இவர்களும் விசாரணைசெய்யப்படுகின்றார்கள். ஹொங்யாங் மேற்றிராசனத்தில் இன்னமும்ஆராதனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ள ஒரேயொரு கோவில் அதன் ஆசனக்கோவிலே. ஏனையகோவில்களெல்லாம் கம்யூனிஸ்தர்களாலே அபகரிக்கப்பட்டுத் தியேட்டர்களாகவும், மற்றுந்தேவைகளுக்கும் பாவிக்கப்படுகின்றன.

### பாப்பரசரும் கம்யூனிஸமும்

கம்யூனிஸம் கிலேசத்திருப்பதிலும் கூடியகாலம் தாம உயிர் வாழ்ந்திருப்பாரென்றும், அதன் வீழ்ச்சியைத் தாம் கண்ணாரக் காண்பாரென்றும், பூமுகத்திலிருந்து அதன் நிழல் துடைத்தொழிக்கப் படுவதைத் தாம் விழித்திருந்து பார்ப்பாரென்றும் பரிசுத்த பாப்பரசர் ஏறக்குறைய நம்பிக்கை தெரிவித்துப் பலமுறைகளிலும் பேசியிருக்கின்றார். இதுவிஷயமாய் அவர் யாதாமோர் காட்சியும் காணாதிருக்கலாம்; ஆனால், அதற்குப்பதில் யாதேனும் ஆர்வமிக்கநம்பிக்கை உருவாகியிருக்கலாமென்று சொல்லப்படுகிறது. ஆயினும், இன்றுஅவரின் விருத்தாப்பியத்தையும், அவருக்குச் சமீபகாலத்தில் ஏற்பட்ட அபாயகரமான நோயையும் கவனிக்குமிடத்து, திருச்சபையின் தலைமைப்பதவியைத் தாங்கிநடத்துவதிலும், பல்வேறுதேசங்களுக்கும் நன்மதியும், நல்லாலோசனையும் கூறுவதிலும் என்றும்போல ஊக்கமுடையவராய்க் காணப்படுவதிலிருந்து அவர் கம்யூனிஸத்தின் இறுதியைக் காணுவாரென்றே நம்பப்படுகிறது.

### கண்தானகாரர் சங்கம்

சமீபத்திலே தாம்மரணிக்குமுன் தம்முடையஇருகண்களையும் இருகுருட்டுப்பிள்ளைகளுக்குத் தியாகஞ்செய்துள்ளவரான வண. கார்லோ ஞோக்கிசுவாமியாரின் ஞாபகார்த்தமாக ரோமைநகரிலே ஓர்நவமான சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே டக்றர்மாரென்றும், பாராளுமன்ற அங்கத்தவர்களென்றும், நீதிபதிகளென்றும், நியாயவாதிகளென்றும், மற்றும்உத்தியோகஸ்தர்களென்றும் 200 பேர் அடங்கியிருக்கின்றனர். தாங்கள்சாகுமுன் தங்கள்கண்களைக் குருடர்களுக்கு மரணசாதனஞ்செய்வதாக இவர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இந்தச் சங்கத்தின் பிரதமவிருத்தியாளரான புறொபெசர்சீசர் கேறின் அவர்கள் அன்றுபேசியபோது, வண. கார்லோ ஞோக்கிசுவாமிக்கு ஓர்ஞாபகசின்னமாய் இச் சங்கம் விளங்குமெனக் கூறியிருக்கின்றார். இவர்களின் குழுவானது கண்தானகாரர் சங்கமென அறியப்படுகிறது.

### இந்தியாவும் மிஷனரிமாரும்

பிறநாடுகளைச்சேர்ந்த மிஷனரிமார் இந்தியாவில் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் விதித்துள்ளதடையானது பிரித்தானியசாம்பிராச்சிய நாடுகளிலிருந்து செல்லுகின்ற மிஷனரிமார்மட்டிலே செல்லமாட்டாது; ஏனெனில், இவர்கள் அந்நியர்களாகக் கருதப்படமாட்டார்கள்; சாம்பிராச்சிய நாடுகளிலிருந்துவருகின்றமிஷனரிமார் இந்தியாவில் பிரவேசிப்பதற்கான தங்கள் அனுமதிச்சீட்டுகளை (பாஸ்போட்டுகளை)ப் புறத்தே கையொப்பமிட்டுக் கொடுத்தாலே போதுமென்று இந்தியபாராளுமன்றத்திலே உள்நாட்டுமந்திரியாரான திரு. பி. என். டற்றார் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதனால், சாம்பிராச்சிய நாடுகளைச்சேர்ந்த மிஷனரிமார் அந்நிய நாட்டினரைப்போல் நடத்தப்படுவார்களென்றுமுன்னர்தெரிவிக்கப் பட்டபோது உண்டானமனக்சருத்தை இது மாற்றிவிட்டிருக்கிறது. இந்திய அரசாங்கம்விதித்துள்ள தடையுத்தரவுப்படி, ஆசிரியர்களாக, டக்றர்மாராக, அன்றேல் சமூகசேவையாளராகத் தகுந்தயோக்கியதையுடையவர்களாய் இருந்தால்தான் பிறநாடுகளைச்சேர்ந்த மிஷனரிமார்களுக்கு ‘விசா’க்கள் வழங்கப்படும்.

### போலிஷ்கருதினாலின் சிறைவாசம்

போலாந்தின் திருச்சபை மேலதிகாரியான கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் பால்திக் கடற்கரையிலுள்ள ஸ்ரெற்றின் நகருக்குச்சமீபமாய்க் காவலில் வைக்கப் பட்டிருக்கிறாரெனச் சுதந்திரஐரோப்பிய வானொலி தெரிவித்திருக்கிறது. 1953-ம் ஆண்டு புரட்டாசிமாதம் இவர் கைதுசெய்யப்பெற்றபின் சிறைவைக்கப்பட்டுள்ள நான்காவது ஸ்தானம் இதுவாகும். இதற்குமுன் கார்ப்பேதியன்மலையைச் சேர்ந்த கொமான்சா என்ற மலைக்கிராமத்திலே சமீபகாலத்தில் இவர் சஞ்சரித்துவந்தமையானது உடல்நலங்குன்றியிருந்த இவருடைய சுகத்துக்கு அனுகூலமாயிருந்ததாகக் கொள்ளப்படுகிறது. திருச்சபை மேலதிகாரிக்குரிய தமதுகடமைகளிலிருந்து இவர்விலகிக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின்பேரிலே கம்யூனிஸ்தர்கள் இவரை விடுதலைசெய்ய முன் வந்தபோது அவர்களின் நிபந்தனைக்கிசைந்துபோக இவர்மறுத்துவிட்டார். இதையிட்டுப் பழிவாங்குமுகமாக, அன்றேல் குருமாரும், சாதாரணகத்தோலிக்கரும் போய்ச்சந்தியாமல் தடுத்துவைக்கும்முகமாகவே இவர்தற்போது இடம்மாற்றப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. கருதினால்ஆண்டவர் இருக்குமிடத்தை மறைத்துவைக்க வேண்டுமென்றே கம்யூனிஸ்த ஆட்சி விரும்புகின்றது.

### குருமடத்தைவிட்டு ஓடியவர்

தமக்குக்குருப்பட்டம் அருளப்படுங்காலம் வந்தபோது, தலைசிறந்தஓர் மாணவராய் இருந்தபோதிலும் ஸ்ரீபின் பெர்னெற்எனும்வாலிபர் குருமடத்திலிருந்து தப்பியோடினார். ஆயினும் இருவருடங்களின்பின் மோட்சாரோபணமாதா குருமார்சபையில் பிரவேசித்துப் பிந்தக் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். சமீபத்திலே திருச்சடங்காசார திருச்சங்கம் இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டஞ் சூட்டுவதற்காயத்தமாய் இவரின் வீரத்துவபுண்ணியங்களைப் பரிசீலனைசெய்திருக்கிறது. பரீஸ்நகரிலே 1909-ம் ஆண்டுபிறந்த வண. பெர்னெற் சுவாமியார் மோட்சாரோபண சின்னக் கன்னியாஸ்திரிமார் சபையையும், மற்றும்ஒரு தொகையான சாதாரண கத்தோலிக்க ஸ்தாபனங்களையும் அடியிடிலாயினர்.

### அதிகம் பாதுகாப்பான கார்

உலகில் அதிகம்பாதுகாப்பானதென்றுபாராட்டிக்கொள்ளப்படும் காரின் பிரதிரூபம் ஒன்று நியூயோக்நகரிலே காட்சிக்குவைக்கப் பட்டிருக்கிறது. இதனைநிர்மாணித்தவர் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவர் சபையைச்சேர்ந்த வண. அல்பிறெட் ஜூலியானேசுவாமியாரே. ஓர்தத்துவசாஸ்திர ஆசிரியரான வண. ஜூலியானேசுவாமியார் பலவருடகாலம் நடத்திவந்த ஆராய்ச்சியின்விளைவாக இந்தநவீனகாரை நிர்மாணித்திருக்கின்றார். அடுத்தகார்காலத்திலே இந்தநவீனகார்கள் ஓர்குறித்த தொகையில்தான் கட்டப்படுமென்றும், இதிலிருந்து பெறும்பணமுழுவதும் தமதுசபைக்கே கொடுக்கப்படுமென்றும் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### நாவிதரான குருவானவர்

பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால்கிறாசியாஸ் ஆண்டவர் ஐக்கியஅமெரிக்க தேசத்திலே சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது, தாம்விருந்தாடியாகத் தங்கியிருந்த மேற்றிராணியாண்டவரின் காரியதரிசியைக் கண்டு, தமக்குத் தலைமயிர்கத்தரிக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டார். அப்போதுஓர் குருவானவர் கத்தரிக்கோலும், மயிரைவாரிப் பற்றிப்பிடிக்கும் கருவியும்கையிற்கொண்டு விரைவிலே அவ்விடம் வந்துசேர்ந்தார். மயிர்கத்தரிக்கும்போது நடைபெற்ற சம்பாஷணையிலே தமதுதந்தையார் ஓர் நாவிதரென்றும், ஓர் இளைஞராய் இருந்தபோது மயிர்கத்தரிக்குந் தொழிலைத் தாம் பயின்றுகொண்டாரென்றும் அந்தக்குருவானவர் அவரிடம்கூறினார். முடிவில் “நேர்த்தியானஓர்மயிர் வெட்டு” என்று கருதினால்ஆண்டவர் தெரிவித்தார். அதிகப் பற்றான அமெரிக்கமக்கள் வேலையின் மகத்துவத்தையிட்டு உயர்ந்தமனப்பான்மை கொண்டிருக்கிறார்களென்றும், மனிதனைப் பெருமைப் படுத்துவது வேலையல்ல; ஆனால், அதிகம் மேலாய் மனிதனே வேலையைப் பெருமைப் படுத்துகிறானென அவர்கள் நம்புகிறார்களென்றும் அன்று பம்பாய் நகரில் நிகழ்ந்த ஓர்வைபவத்திலே கருதினால்ஆண்டவர் எடுத்துக்கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** குருத்துவ, சந்நியாச, கன்னிகா அந்தஸ்துகளுக்கான தேவ அழைத்தலையும், அதன் மகத்துவத்தையும் பற்றிக் குருமாரும், விசுவாசிகளும் சரிவர உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** கோறியநாட்டிலே வேத போதகர்களின் தொகை அதிகரிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
சித்திரைமாதம் 12-ந் திகதி

## பொதுத்தேர்தலும் ஐ. தே. க. அரசாங்கமும்

சேர் ஜோண் கொத்தலாவல அவர்களைத் தலைவராகக் கொண்ட ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் தனது ஆயுள்காலத்தைத் தானாகவே குறுக்கிக்கொண்டது. அதாவது, இன்னும் ஒன்றரைவருடகாலம்—ஏன், வேண்டுமானல் ஏதோ ஒருகாரணத்தைச் சாட்டாக வைத்துக்கொண்டு மேலும் சிறிதுகாலம் தனது ஆயுளை நீடிக்கச்செய்யக் கூடியதாயிருந்தும் யாதோகிருத்திரமத்தை மேற்கொண்டு இடையிலே பாராளுமன்றத்தை அனுவசியமாகக்கலைத்து, ஓர்புதியதேர்தலை நடாத்தமுன்வந்தது. அதன்விளைவாகத் தனதுபலத்தைஇழந்தது. தனது அதிகார பதவியை இழந்தது. ஐக்கிய தேசியக்கட்சியே உருக்குலைந்துவிட்டது. 1952-ம்ஆண்டின் பொதுத்தேர்தலில் அடைந்துகொண்ட வெற்றிகாரணமாக 54பிரதிநிதிகளைக் கொண்டிருந்தகட்சி இன்று 8 பிரதிநிதிகளையே கொண்டதாய் இழுக்குற்று, இடதுசாரிக் கட்சிகளில் ஒன்ருய் இடம்மாறவேண்டிய நிலைமைக்குள்ளானமை இரங்கத்தக்கதாகும். அன்று அரசாங்கம் அரிசியின்விலையை ஏற்றியமையால் நடைபெற்ற "ஹார்த்தல்" பிரதமர்டட்லி சேனநாயக அவர்கள் பதவியிழக்கச் செய்ததென்றும் இன்று "சிங்களம்மாத்திரம்" என்றபிரச்சினை வரப்போய் நடைபெற்ற "ஹார்த்தல்" பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களைப் பதவியிழக்கச் செய்ததென்றும் பேசிக்கொள்ளப்படுவது எவர்க்குமே பெரும்ஆச்சரியம் தருவதாகின்றது. இன்னும் களனிவலையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி மகாநாட்டில் அரசாங்கபாஷை "சிங்களம்மாத்திரம்" என்ற பிரேரணையை எடுத்தாண்ட பெரியாரும், அதனை அனுவதித்த பெரியாரும் இந்தப் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்து தங்கள்ஸ்தானங்களை இழந்துபோனமையும் பேராச்சரியமாகத்தான் இருக்கின்றது. புத்தஜயந்திக்குமுன் பொதுத்தேர்தலை நடத்தினல்—அதுவும் சிங்களத்துக்குமுடிசூட்டுவதையே குறிக்கோளாகக்கொண்டு பொதுத்தேர்தலை நடத்தினல் தனக்கு 65ஸ்தானங்கள் கிடைக்குமென்று நம்பியிருந்த ஐக்கியதேசியக்கட்சியானது இத்தேர்தலிலே இன்று முடிசூடுவதற்குப்பதில் அடிபாறிவிழுந்திருக்கின்றது. "மக்களின் ஐக்கியமுன்னணி"க்குத் தலைமைவகித்துப் பொதுத்தேர்தலில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகஅவர்கள் இந்தப் பொதுத்தேர்தலிலே தமது கட்சியின்பேரால் பெரும்பான்மையான ஸ்தானங்களைப்பெற்றுப் பிரதமர்பதவி வகிக்கப்போகின்ருர். ஆயினும் இவரைத்தலைமையாகக்கொண்ட மக்கள்ஐக்கியமுன்னணியும் இரண்டொரு கட்சிகளைக் கொண்டதன்று. அவ்வாறே எதிர்க்கட்சிகளுமாகும். பொதுவிலே இந்தப் பொதுத்தேர்தலில் ஈடுபட்ட கட்சிகள் பதினென்றுஎன்று சொல்லப்படினும் கல்விமானை பத்திரிகாசிரியர் ஒருவரோ அவற்றின்தொகை பதினேழென்று எடுத்துக்காட்டியிருக்கின்ருர். இதைச்சிந்தித்துப் பார்க்கும்போது பல்வேறுஅரசியற்கட்சிகளைக் குட்டிகுட்டியாகக் கொண்டுள்ள பிரான்சின் அரசியல்நிலைமைதான் இங்கும் வருமா? அங்குபோல நிரந்தரமற்றஅரசாங்கங்கள்தான் மாறிமாறி இங்கும்வந்துகொண்டிருக்குமோ? அன்றேல் ஸ்திரமான ஓர்அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுமோ? என்றவாருனபலகேள்விகள் இந்தவேளை எம்முள்ளத்தில் எழுகின்றன. நிற்க, வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் தமிழ்மக்களின்—தமிழ்ப்பேசும்மக்களின் பிரதிநிதிகளாகத் தெரியப்பெற்றிருக்கும் பதினறுபேரும் தமிரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, அடங்காத்தமிழர் முன்னணிக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, சுயேச்சைக்கட்சி என்பனவாகப் பல்வேறு கோஷ்டிகளையும் சேர்ந்தவர்களாய் இருந்தபோதிலும் இனிமேலாவது தமிழர்ஐக்கியமுன்னணியை அமைத்துத் தமிழினத்துக்காகவும், தமிழ்ப்பாஷைக்காகவும், தமிழ்க்கலாசாரத்துக்காகவும் அடம்பன்கொடிபோல்திரண்டு தம்முளே ஒத்துழைப்பார்களென நம்புகின்ருேம்.

# விளையும் பயிர்

கார்தேஜ்நாட்டின் பழங்காலத் தளகர்த்தன் ஹனிபல் என்பவனைப்பற்றி அறியாதவர் யார்? சிறுப்பத்திலிருந்தே தினமும் யுத்தப்பயிற்சி செய்துகொள்வது அவன்வழக்கம். ஒருநாள் ஏதோகாரணத்தால் இந்தப்பயிற்சியைக் கைவிட நேர்ந்தது. அன்றுசாயுங்காலம் அவனுக்குப் பயிற்சிஅளிப்போரில் ஒருவன்வந்து, இன்று நீ என்னசெய்தாய்? என்று கேட்டான். அதற்குக் ஹனிபல் "அந்தோ! இன்றையநாளை வீணாக்கிவிட்டேன்" என்று பெருமூச்செறிந்தான்.

நமதுவாழ்வின் இறுதிநாளில் இம்மாதிரியாய் எழுகின்ற கேள்விக்கு நாமும், "வாழ்க்கையை ஏறத்தாழ முற்றிலும் பாழ்படுத்தி விட்டோம்" என்று சொல்லும் நிலையிலிருக்கிறோமாக்கும்! பாலியப்பருவத்தில் என்னஉற்சாகத்துடனும், எவ்வித நம்பிக்கையுடனும் நமது வாழ்க்கையைத்தொடங்கினேம்! எல்லாம் கண்களுக்குக் கவர்ச்சிகரமாகத் தோன்றின. மகிமையும், கீர்த்தியும் கிடைக்குமென்று நம்பினேம். கடவுளுக்கும் திருச்சபைக்கும் மிகுந்த பிரமாணிக்கமாய் இருப்பதால் வரும்பேறு நம்மைவசீகரித்தது. ஒவ்வொருபுத்தாண்டும் புதியதோர் நம்பிக்கையைக் கொணர்ந்தது. இவை யாவும் சேர்ந்து வாழ்வானது மிகவும் விரும்பத்தக்கதொன்றெனக் காட்டியது. ஆனல், நம்மில்பலர் இப்போது ஏமாற்றம் அடைந்துள்ளோம். கடவுளுக்கும் மற்றவர்களுக்கும் நமக்கும்கூட ஏமாற்றத்தையே தருவித்திருக்கிறேம். நம்வாழ்வில் எதைச்சாதித்திருக்கிறேம்? இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிற்சில பிறர்சிநேகமுயற்சிகள்; நமதுநிலபுலத்தில் அற்பசொற்ப வேலைகள்; ஏனேதானேஎன்றவாறு இரண்டுமூன்று பிள்ளைகளைவளர்த்தால்—ஆனல், நிலையானகாரியம் ஏதாவதுசெய்தோமா என்றுபார்த்தால் அதுதான் இல்லை. நமதுகவனமெல்லாம் நிலையற்றவைகளின்மேல் இருந்திருக்கிறது. நாட்களும், வருடங்களும் உருண்டோடின. நமக்கும்வயதானது. பயன்? நாம்எப்பேர்ப்பட்ட மனிதனுக ஆகவேண்டுமென்று நினைத்தோமோ, அந்தநோக்கத்தில் சித்திபெற்றேமா? இல்லை.

நாம் பெரிதாகக்கருதி ஈடுபட்டவையெல்லாம் அவ்வாறில்லை என்பதை இப்போதுநினைக்கக் கசப்பாயிருக்கிறது. பொருட்களின் தரத்தைஅளந்துபார்க்க நமது சொந்தஅளவுகோலை ஏற்படுத்திக்கொள்வது எவ்வளவு தவறென்று இப்பொழுதுதெரிகிறது. இவ்வாறு நமதுதோல்விகளையும், ஏமாற்றங்களையும் அடுக்கிக்கொண்டே போகலாம். சிநேகத்தில் ஏமாற்றமடைந்த நண்பர்கள், பிள்ளைகளைப் பராமரிக்கத் தவறியபெற்றேர்கள், பெற்றேரைத் தள்ளாதவயதில் கைவிட்டபிள்ளைகள், பிரமாணிக்கம்தவறிய தம்பதிகள், பாலியபிராயத்தைப் பாழ்படுத்திய வாலிபர்கள் இவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டுபோனல் முடிவேஇராது. சொல்லவும் மனம்பொறுக்காது.

சகோதரரே, ஏன் இந்தத் துக்கம்? நமதுபுத்தி தடுமாறுகிறது. நாம் நினைப்பதுபோல் கடவுள் நினைப்பதில்லை. நமது கருத்துக்களுக்கும், கடவுளுடைய கருத்துக்களுக்கும் பாரதூர வித்தியாசம். கீர்த்தி, அதிகாரம், வல்லமை, மற்றவர்களுடைய அன்பு, கீழ்ப்படிதல், வணக்கம்இவற்றை மட்டுக்குமிஞ்சி விரும்பினேம். தோல்வியென்ருல் நடுங்கினேம், நமது வாழ்வு என்னும்பாதை பூத்தெளித்த பாதையாகவிருக்குமென்று எதிர்பார்த்தோம். குருத்துஞாயிறன்று பவனிவந்த கிறீஸ்துநாதரை நமது முன்மாதிரிகையாக வைத்துக்கொண்டோம்; நமக்குப்புகழும், நல்ல வரவேற்பும் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தோம். புகழும் சனத்திரள், உற்சாகம்நிறைந்த ஏவலாளர்கள் நம்மைச் சூழ்ந்திருப்பார்கள்என்றுஎதிர் பார்த்தோம்.

கிறீஸ்துவின் இவ்வுலகவாழ்வு ஓர்தோல்வியாயிருந்தது. குருத்துஞாயிறின் ஆரவாரங்கூட ஓர் படுதோல்வியென்றே சொல்லவேண்டும்—முக்கியமாய்ப் பெரியவெள்ளியோடு ஒத்துப் பார்க்கையில், கிறீஸ்துவின் இவ்வுலகவாழ்வின் ஒரேநோக்கம் தமதுபிதாவுக்குப் பிரமாணிக்கமாயிருப்பதுவே. தமது அப்போஸ்தலர்களுக்குப் போதித்தார்; என்னபயன்? அவருடைய போதகத்திற்கு எவ்வளவு எதிர்ப்பு! அற்புதங்களைச் செய்தால், பசாசின் உதவியைக் கொண்டு செய்கிறதாகப் புகார். நன்மையைச்செய்தால் கல்லால் எறிந்து கொல்லப்பார்க்கிருர்கள். உண்மையைச் சொன்னதற்காகச் சிலுவையில் அறையப்பட்டார். ஆனல், அவர்தோல்வியே அவரதுவெற்றியாக மாறினது. அதற்குக் காரணம் என்ன? தமதுபிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதைத் தமதுஒரேநோக்கமாகக்கொண்டிருந்தது. எனவே, வெளிக்குத் தோல்வியாகத் தோன்றினவையெல்லாம் உண்மையில் பெரும் வெற்றியாகவிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவாழ்வின் நோக்கம் நம்மைத் தூய்மைப்படுத்துவது — நமக்கு இன்பத்தை ஊட்டுவதல்ல. நெருப்பில் பொன் சுத்தமாகிறது. நம்முடையவாழ்வோ தோல்வியிலும், துக்கத்திலும் தூய்மை அடைகிறது. இதைத்தான் யேசு நமக்குப் படிப்பிக்கிறார். நாமும் அதன்படி ஒவ்வொருதோல்வியும் நம்மைஒரு எட்டு நமது ஆண்டவருக்கருகே கொண்டுவருகிறது என்றுகருத வேண்டும். நமதுதோல்விகளை ஆண்டவருடைய தோல்விகளோடு சேர்த்துப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தால், அதுவே உன்னதவெற்றிக்கு வித்தாயிருக்கும்.

(கி. இ. தா.)

## புத்தக மதிப்புரைகள்

### தமிழ் அறிவு

**உயர்தர வகுப்புகளுக்குரியது**

ஆக்கியோன்: க. பே. முத்தையா
விலை: ரூபா 3-25

உயர்தரவகுப்புக்களில் பாஷைப்பாடம் கற்பிப்பதற்கேற்றவகையில் புதிய போதனுமுறைகளைப் பின்பற்றி இந்நூல் இரண்டாம்பதிப்பாக வெளிவந்திருக்கின்றது. சொல்லறிவு, சொற்றொடரறிவு, கட்டுரையறிவு, செய்யுளறிவு, சுருக்கியெழுதுமறிவு, நூலறிவு, மொழிபெயர்ப்பறிவுஎன ஏழியல்களாக வகுக்கப்பெற்று, அரியபலஉதாரணங்களுடன் மிளிரும்இந்நூல் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்கு ஓர் அரிய வழிகாட்டியாக இருக்குமென்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. சொல்லறிவு, சொற்றொடரறிவு என்னும் அதிகாரங்கள் சிறுவருமே இலகுவில் விளங்கத் தக்கவகையில் அமைக்கப்பட்டுள்ளன. கட்டுரைப்பகுதியில் அமைந்துள்ள மாதிரிக்கட்டுரைகளும், செய்யுளறிவிலுள்ள பொருள்கூறல், நயம்கூறல்ஆகியாம் பகுதிகளும் ஆசிரியரின் மதிவளத்தையும், அனுபவத்திறனையும் எடுத்துக்காட்டுவனவாகும். இன்னும் இறுதியில் அமைந்துள்ள முத்துக்குவியலும், மாதிரிவினாப்பத்திரங்களும் இந்நூலைத் தனிச்சிறப்புடன்திகழவைக்கும் அரிய பகுதிகளெனின் மிகையாகாது. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

### வளருந்தமிழ்

**முதலாம் புத்தகம் (ஆறும்வகுப்பு)**

ஆக்கியோன்:
பண்டித க. யோ. ஆசிநாதன்
விலை: ரூபா 1-30

வித்தியாபகுதியாரின் ஆறும்வகுப்புப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி மாணவர் கவர்ச்சிகரமான முறையில் மொழியறிவைப் பெற்றுக்கொள்வதற்கான கருவிநூலாக அமையுமாறு இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. இதிலே வாக்கியம், வாக்கிய உறுப்புக்கள், சொற்கள், எழுத்து, புணர்ச்சி, மொழிப்பயிற்சி, நிறுத்தற்குறிகள், உரைநடைஎன்ற எட்டுப்பொருள்கள்பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருபாடஇறுதிக்கண்ணும் அரிய பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. இப்பயிற்சிவினுக்கள் எடுத்துக்கொண்ட விடயத்தை இனிதுவிளக்குவனவாகவும், தரப்படுத்தப்பட்டனவாகவும் அமைந்திருப்பதே இந்நூலின்கண் அமைந்துள்ள தனிச்சிறப்பாகும்.

உரைநடை—கட்டுரை என்றபகுதியில் கதைஎழுதல், வரலாறு எழுதல், வருணித்துஎழுதல், சொற்றொடர்களை விளக்கிஎழுதல், நிகழ்ச்சிகளைவரைதல் ஆகியாம் விடயங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, இந்நூல்தமிழ்மொழியைத் திருத்தமாகப்பேசவும், எழுதவும் உதவிசெய்யும் தூண்டுகோலாக விளங்குமென்பதில் எட்டுணையும் ஐயமின்று. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

## காமாலை நோய்

காமாலைரோகமானது பித்தப்பை விகற்பத்தால் ஏற்படுகிறது. கல்லீரலின் வீக்கத்தினல் பித்தப்பையின் சவ்வு நசுங்கிப் பித்தநீர் உடலில் வியாபித்து, உடலின் நுண்உறுப்புகளை மஞ்சளாகச் செய்துவிடுகிறது. முக்கியமாகக் கண்களின் வெள்ளைவிழியையும், நகக்கண்களையும் மஞ்சள்நிறமாக்கிவிடும்.

அடுத்தபடியாக முகத்தையும், கழுத்தையும் மஞ்சளாகமாற்றி நாளடைவில் உடல் முழுவதையுமே மஞ்சளாக்கிவிடும். சிறுநீரானது தேனைவிடச் சற்றுவெளுறின நிறமாகவோ, அல்லது கருங்காவிமரத்தின் நிறமாகவோ இறங்கும். சிலசமயங்களில் மலச்சிக்கலோ—வயிற்றுப்போக்கோ ஏற்படுவதுமுண்டு. சதாபுளித்த ஏப்பமும், வாய்க்கசப்புமுண்டாகும்; ஆகாரம்செல்லாது. சில சமயங்களில் சுரம்காணுவதுண்டு. முகத்தில் வலியும், விலாவிலே ஏதோஒருவித பாரம் அழுத்திக்கொண்டிருப்பதைப்போன்ற உணர்ச்சியும் ஏற்படும். சிலசமயங்களில் வயிற்றுப்பொருமலும், பசிமந்தமும் ஏற்படுவதுமுண்டு. கல்லீரலானது வீங்கியிருக்குமாதலால் இருதயநடைக்கு இடைஞ்சல்ஏற்பட்டு நாடிஓட்டமும் மெதுவாகத் தணிந்திருக்கும்.

### நோய்க் காரணங்கள்

மஞ்சள்காமாலைரோகம் மரணத்தை உண்டாக்கக்கூடிய ரோகமல்லவெனினும், நோய்கண்டவுடன் அதைநீக்க முயற்சிக்காமல் முற்றவிட்டால் மரணம் நிச்சயம்நிகழும். வயதுவந்தவர்களுக்குக் காமாலைஉண்டாகுமானல் அது கிரந்திரோகம் தாக்கியதால் ஏற்பட்டதாகஇருக்கலாம். குழந்தைகளுக்குக் குளிர்மிகுதியாலும், ஆகாரவிகற்பத்தாலும், வறட்சியானகாற்றாலும் இந்நோய் ஏற்படஏதுவாகும்.

### தடுப்பு மருந்து

இந்தநோய் வாராமல் தடுத்துக்கொள்ளும்வகைக்கு இதன்கீழ்க்காணும் குடிநீரை 5 அல்லது 7 நாட்களுக்குக் காலைமாலை அருந்தினல் போதுமானது.

கீழ்காய்நெல்லிசமூலம், மணத்தக்காளி இலை, பொற்றலைக்காப்பான் இம்மூலிகைகள் வகைக்குஒருபிடி உரலில் போட்டுஇடித்து மண்சட்டியில் போட்டு அதில் மூன்றுரூபாஎடை அதிமதுரத்தைப் பொடித்துப்போட்டு ஒருபடிதண்ணீர்விட்டுக் கால்படியாகச் சுண்டவைத்து வேளைக்கு ஒன்று முதல் இரண்டு அவுன்சுமூலம் குடித்துவரவும். பத்தியமில்லை.

மஞ்சள் காமாலைநோய் ஏற்பட்டு அது எந்தநிலையில் இருந்தாலும் கீழ்க்காணும் பிரயோகம் செய்துகொள்ள வேண்டியது.

### நோய்க்குச் சிகிச்சை

சங்கன் வேர்ப்பட்டை மூன்றுரூபா எடை, கீழ்காய்நெல்லி மூன்றுரூபா எடை, பொற்றலைக்கரப்பான் மூன்றுரூபாஎடை, மணத்தக்காளிஇலை மூன்றுரூபாஎடை, அதிமதுரம் மூன்றுரூபாஎடை இவைகளை அம்மியைச் சுத்தமாகக்கழுவி அதில்வைத்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டு மைபோல் அரைத்துக் காலைமாலை நெல்லிக்காய்ப் பிரமாணம் நான்கு அவுன்சு காய்ச்சாத பசுவின்பாலில் கலக்கி ஐந்துநாட்களுக்கு உண்டுவரவும். பத்தியம் பால், கஞ்சி. இந்த ஐந்து நாட்களுக்குள் வியாதி முற்றிலும் குணமாகிவிடும். ஆறுவதுநாள் ஆறப்போட்டு ஏழாவது நாள் தலைக்கு ஓமத்தண்ணீர்விடவும்.

— தமிழ்நாடு

---

## ஈருந்த தருமதொண்டு

ஓர்நாள்ஒருபெண் வெடிகுண்டொன்று வெடித்தபோது தன்னுடைய இருகால்களையும் இழந்துபோனபிள்ளை ஒன்றைச் சுவாமியாரிடம்கொடுத்து, “இது என்னுடைய மகன்; இவனை வளர்ப்பது எப்படியென்று எனக்குத்தெரியவில்லை; உங்களுடன் இவனைவிட்டுச்செல்லுகிறேன்” என்றுசொன்னள். சுவாமியார் அழுதுகொண்டிருந்த அப்பாலியனை அன்புடன்கையேற்றுப் பராமரித்துவந்தார். பின்னர் இப்படிப்பட்ட அசக்தர்களான பிள்ளைகளுக்கென்று இத்தாலிமுழுவதிலும் பலதருமசாலைகளை ஸ்தாபிக்கமுன்வந்தார். தற்போது இந்தத்தருமசாலைகளில் 1,800 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். 53 வயதுடையவரான வண. கார்லோ ஞொக்கிஎனப் பெயரிய இந்தக்குருவானவர்மிலான்நகரிலுள்ள ஆரோக்கியசாலை ஒன்றில் சமீபத்திலே மரணமாயினர். இவர் மரணப்படுக்கையாய்க் கிடந்தபோது அப்படுக்கையின்பக்கமாகப் பெருந்திரளானபிள்ளைகள் ஒழுக்கெறும்புகள்போன்று நீண்ட வரிசையிலே அன்பளிப்புகளுடன் சென்றார்கள். அவருடைய பிரேதசேம ஊர்வலத்தின்போது, மிலான்நகர் வீதிகளிலே ஒருலட்சம்மக்கள்வரையிலே வரிசையாக அணிவகுத்துநின்றார்கள். இவர்களிலே பல்லாயிரவர் பிரலாபித்துஅழுதுநின்ற காட்சி பெரும்பரிதாப காட்சியாயிருந்தது. அவ்வேளை வாகனப்போக்குவரத்தெல்லாம் நிறுத்தப்பட்டிருந்தது. முன்னைநாள் அல்ப்பைனியபடைவீரர் அவரின் உடலைச்சுமந்துசென்றனர். ஏனெனில், யுத்தகாலத்திலே இவர்அவர்களுடன் சேவைசெய்தார். 3,000 முடப்பிள்ளைகள் உட்படப் (இவர்களிற்சிலர் சில்லுக்கதிரைகளில் சென்றனர். ஏனையபிள்ளைகள் கன்னியாஸ்திரீமாராலும், போர்வீரராலும் தூக்கிச்செல்லப்பட்டனர்.) பதினுயிரமக்கள் அவரதுஉடலைப் பின்தொடர்ந்து அனுதாபத்துடன் சென்றார்கள். “பிள்ளைகளின் சம்மனசுச்சுவாமியாரென அறியப்பெற்றுவந்த இவர் மரிக்குமுன் கண்வைத்திய நிபுணர்ஒருவரை வரவழைத்து, தாம்இறந்தபின் தமதுகண்கள் இருபிள்ளைகளின்மூலம் உயிர்நிலைத்திருக்க”ச் செய்துவிட வேண்டுமெனத் தாம்ஆசிப்பதாகக் கூறினர். வண. ஞொக்கி சுவாமியார் யுத்தத்தாலே அங்கசேதமடைந்த பிள்ளைகளுக்கு ஆற்றிச்சென்ற ஈறுந்ததருமதொண்டு இதுவாகும். பால்க்கன்நாடுகளில் ஓர்பட்டாளவிசாரணைக்குரவராகக்கடமையாற்றிவிட்டுப் பிரான்சுக்குத்திரும்பியதும் 1945-ம்ஆண்டு இந்தத் தருமப்பணியை இவர்தொடக்கியிருந்தார்.

---

### தம்பதிகளான பிரதிநிதிகள்

புதிய பாராளுமன்றச் சனப்பிரதிநிதிகள்சபையிலே புருஷனும், மனைவியுமாகத் தம்பதிகளான பிரதிநிதிகளாய் நால்வர் தெரியப்பெற்றிருக்கின்றனர். இவர்களிலே பாணந்துறைப் பிரதிநிதியாகத் தெரியப் பட்டிருக்கும் திரு. லெசிலி குணவர்த்தனவும், கொழும்பு வடக்குப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டிருக்கும் திருமதிவிவியென்னே குணவர்த்தனவும் புருஷனும், மனைவியுமாவர். இன்னும் அவிசாவெலைப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டிருக்கும் திரு. பிலிப்குணவர்த்தனவும், கிரியெல்லைப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டிருக்கும் திருமதிகுஸுமாகுணவர்த்தனவும் புருஷனும் மனைவியுமாவர். திருமதி விவியென்னே குணவர்த்தன அவிசாவெலைப் பிரதிநிதியான திரு. பிலிப் குணவர்த்தனவிற்கு மகள் முறையானவர்.

### கட்சிகளின் பலம்

புதிய பொதுத்தேர்தலின் முடிபாய்ப் பல்வேறு அரசியற்கட்சிகளின் பலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மக்கள் ஐக்கியமுன்னணி | — 51 |
| நவலங்கா ச. ச. கட்சி | — 14 |
| தமிழரசுக்கட்சி | — 10 |
| ஐக்கியதேசியக்கட்சி | — 8 |
| சுயேச்சை | — 6 |
| கம்யூனிஸ்தகட்சி | — 3 |
| அடங்காத்தமிழர் முன்னணி | — 1 |
| தமிழ்பேசும் முன்னணி | — 1 |
| தமிழ்க்காங்கிரஸ் | — 1 |
| மொத்தம் | 95 |

### காலநிலை

சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணமுழுவதிலும் ஓர்பாட்டம் நல்ல மழை பெய்யலாயிற்று. ஆனல், தேர்தல்தினமாகிய சென்றசெவ்வாய்க்கிழமை மழைவிட்டுக்கொடுத்துத் தேர்தல் வசதியாக நடைபெறச்செய்தது. மழைக்கோலம் அதிகமாகக் காணப்பட்டபோதிலும் வெயிலின் அகோரமும், புழுக்கமும் அதிகமாயிருக்கின்றன. சாயந்தர வேளைகளில் இளங்காற்று வீசிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழுதலின் நாள்

—: தே. ந. ச. ம. :—

உலகவாலாற்றிலேயே ஒரேயொரு கல்லறைக்குத்தான் காவல்வைக்கப்பட்டுக் கல்லறைவாயிலின்மேல் பாறையுருட்டி மூடப்பட்டிருந்தது. யாருடைய கல்லறைக்கு? நமது மன்னன் யேசுபிரான் மரித்தடக்கஞ் செய்யப்பட்ட கல்லறைக்குத்தான். உயிரற்ற உடலினுக்கு ஆயுதந்தாங்கிய போர் வீரர்கள் காவல்புரிவதென்பது உங்களுக்கு விந்தையாக இல்லையா?

மரித்தோர் நடப்பார்கள்; மீளா நித்திரையில் ஆழ்ந்தவர்கள் மீளவும் பேசுவார்கள்; துளைக்கப்பட்ட இருதயம் திரும்பவும் துடிக்கும் என்பதற்காகத்தான் கல்லறைக்குக் காவல். அவர் மரித்துவிட்டாரென அவர்களே கூறுகிறார்கள்; அவர் இறந்துவிட்டாரென அவர்களுக்குத் தெரியும்; அவர் உயிர்த்தெழ மாட்டாரென உங்களுக்கு உரைப்பார்கள்; ஆயினும் அவர்கள் அக்கல்லறையைக் கண்ணுங்கருத்துமாய்க் கனசாக்கிரதையாய்க் காவல் புரிவார்கள்!

கல்லறைமேல் கவனம் கடைசிநிமிடத்தில் தோன்றியதல்ல. ஜெருசலேம் தேவாலயத்திலிருந்து காசுக்கடைக்காரர்களைக் கர்த்தர் கடிந்துவிரட்டிய நாளில், அவர் தாம் உயிர்த்தெழுவதைப்பற்றிக்கூறிய தீர்க்கதரிசனத்தை வைத்துக்கொண்டுதான் இத்தனைமுஸ்திப்புகளும் நடைபெற்றன.

"இந்தக்காரியங்கள் அனைத்தையும் புரிவதற்கு உமக்கு எங்கிருந்து வல்லமை கிடைத்தது என்பதற்கு எமக்கென்ன அடையாளம் காட்டுவீர்?" என அவரிடம் அவருடைய விரோதிகள் வினவினார்கள். அதற்கு ஆண்டவர்: "இவ்வாலயத்தை இடித்துவிட்டு மூன்று நாட்களுக்குள் திரும்பவும் எழுப்புவேன்" என்றார்.

"இந்தத்தேவாலயத்தைக் கட்டவே 46 ஆண்டுகள் ஆயினவே; 30 ஆண்டுகளே நிரம்பியிருக்கும் இந்த யாருமறியாக் கலிலேயனோ இதை அழித்து மூன்றுநாளில் கட்டுவான்? எனக் கேட்டனர். ஆனால், பரிசுத்த வேதாகமத்திலோவெனில், "அவர் திருச்சரீரமாகிய ஆலயத்தைக் குறித்தே கூறினார்" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

மூன்றாண்டுகள் கடந்தன. தம்முடைய விசாரணையின்போது ஆண்டவர் ஆலயத்தில் காசுக்கடைக்காரரைக் கடிந்து விரட்டியதைப்பற்றிக் குற்றம் சாட்டப்படவில்லை. ஏனெனில், அக்காரியத்தைச் செய்யும்படி தூண்டிய தன்மையானது மிகவும் உன்னதமானதாயிருந்தது.

ஆனால், ஒருவிஷயத்தை மாத்திரம் சாட்சிக்காரர் ஞாபகத்திலே வைத்திருந்தனர். எல்லாப் பொய்க்குற்றச்சாட்டுகளையும்போன்றே இதையும் அவர்கள்திரித்து, "மனிதனின் கைகளால் கட்டப்பட்ட இவ்வாலயத்தை நான் அழித்து, மூன்றுநாளில் வேறு மனிதரின் உதவியில்லாமலே வேறொரு ஆலயம் அமைப்பேன்என்று இவன் கூறியதை நாங்கள் கேட்டோம்" என்றனர். அவர் ஓர் அர்த்தத்தில் மொழிந்ததை இவர்கள் அனர்த்தம்செய்துவிட்டனர். "நான் இந்த (கல்லான) ஆலயத்தை அழிப்பேன்" என்று தான் உரைத்தார்.

பெரிய சனிக்கிழமை காலை சிலர் பிலாத்துவின் சமுகத்தில்கூடி, "இந்த ஏமாற்றுவித்தைக்காரன் தான் உயிருடன் இருக்கும்போது 'நான் மூன்று நாளில் உயிர்த்தெழுவேன்' என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், மூன்றாம்நாள்முடியும்வரை அவனுடைய கல்லறையைக் காவல்புரியக் காவலர்களை நியமிக்கக் கட்டளையிடுங்கள்; இல்லையேல், அவனுடைய சீடர்கள் ஒருவேளை தங்கள் குருவினுடைய உடலை எடுத்துச்சென்றாலும் செல்வர்" என்றனர்.

அதற்குப்பிலாத்து அவர்களைநோக்கி: "உங்களிடமே போதிய காவலர்கள் இருக்கின்றனரல்லவா? ஆகையால், போய் உங்கள்இஷ்டப்பிரகாரம் கல்லறைக்குக் காவல்போடுங்கள்" என்றான். அவர்களும் போய்க் கல்லறைக்கு முத்திரையும், காவலும் வைத்து அதைப் பத்திரப்படுத்தினர்.

இந்த விநோதத்தைக் கேளுங்கள்! கிறீஸ்துநாதரின் விரோதிகள் அவருடைய உயிர்த்தெழுதலை எதிர்பார்த்தனர்; ஆனால், அவருடைய ஆப்தசீடர்களோ அதைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை.

* * *

இதோ மரியமதலேனாள் வாசனைத் திரவியங்களை எடுத்துக்கொண்டு அதிகாலை நேரத்துடனேயே வருகிறாள். உயிர்த்தெழுந்த இரட்சகரைக் காண்பதற்கல்ல. உயிரற்ற சடலத்திற்கு வாசனைத்திரவியங்களைப்பூச வந்திருக்கிறாள். இதில் இன்னும் பரிதபிக்க வேண்டியதென்னவெனில், அவள் அழுதுகொண்டிருக்கிறாள். கல்லறை காலியாயிருப்பதைக்காணும் அவள் கர்த்தர் உயிர்த்ததைப்பற்றி எண்ணாமல், "என் ஆண்டவரை அவர்கள் எடுத்துச்சென்றுவிட்டனரே! அவரை அவர்கள் எங்கு வைத்தார்களோ தெரியவில்லையே" எனப் பிரலாபிக்கிறாள்!

அதேதினம் பிற்பகலில் யேசுநாதரின் சீடர்கள் வருத்தத்தோடுபோய்க்கொண்டிருக்கிறார்கள். உயிர்த்தெழுந்த நமது ஆண்டவரும் அவர்களுடன் போகிறார். ஆனால், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அவர்களை நோக்கி: "நீங்கள் ஏன் வருத்தமாயிருக்கிறீர்கள்?" என வினவுகின்றார் யேசு.

அவர்கள் கல்லறைகாலியாக இருந்ததைக் கண்டபெண்கள் கூறியதையும், கர்த்தர் உயிர்த்தெழுந்ததைப்பற்றிச் சம்மனசுகள் அப்பெண்களுக்கு அறிவித்ததைப்பற்றியும் கூறினார்கள். ஆனால், அவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலில் நம்பிக்கையின்றி, "இஸ்ராயேலரை இரட்சிக்கவந்தவர் அவராகத்தான் இருக்கவேண்டுமென நாங்கள் நினைத்திருந்தோம்" என முறையிட்டனர்.

கல்லறைகாலியாகிக் கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டாரெனச் சம்மனசுகள் சொன்னதை ஸ்திரீகள் வாயிலாகக் கேட்டபோது, அவர்கள் அப்பெண்மணிகளின் வார்த்தையை நம்பவில்லை. ஏதோ பெண்கள்பேசும் சாதாரணமான வம்புப்பேச்சென்று அலட்சியமாய் இருந்துவிட்டனர்.

ஆனால், ஏன் மரியமதலேனாள் ஆண்டவரின் உயிர்த்தெழுதலை எதிர்நோக்கி இருக்கவில்லை? கல்லறை காலியாயிருப்பதைக்கண்டு கண்ணீர்வடிக்கஆரம்பித்துவிட்டாளே.

காலைக்கதிரவனின் கதிரொளிகள் பசும்புல்லின்மேல் படிந்திருக்கும் பனித்துளிகளின் மீதுபட்டுப் பிரகாசிக்க, கீழ் நோக்கிய பார்வையுடனிருந்த மதலேனாள் தன் அருகில் யாரோ "ஸ்திரீயே, ஏன் அழுகின்றனை?" எனக் கேட்பதைக் கவனித்தாள்.

அதற்கவள், "ஏனெனில், என் ஆண்டவரை அவர்கள் தூக்கிச்சென்றுவிட்டனர். எங்கு வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை" என மறுமொழி பகர்கின்றாள். சம்மனசுகளைக் கண்டதினால் அவளிடம் எவ்விதமான பயமும், மிரட்சியும் உண்டாகவில்லை. அச்சமயத்தில் உலகமே பற்றியெரிந்திருந்தாலும் அவள் திகைப்படைந்திருக்கமாட்டாள். அவ்வளவுதூரம் அவளுடைய ஆத்துமம் துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடந்தது.

இதைச்சொல்லிவிட்டு அவள்திரும்பினாள். பின்னால் யேசுநிற்பதைக் கண்டாள். ஆனால், அவர்தான்யேசு என்பதை அவள் கண்டுகொள்ளவில்லை.

யேசு: "பெண்ணே! ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" எனக் கேட்டார்.

அவரை அவள் அரிமாத்தியாவூராகிய சூசையப்பரின் தோட்டக்காரனென்று நினைத்தாள். காணாமற்போனவரை எங்கு காணலாமென்பதை அவன் ஒருவேளை அறிந்திருக்கக் கூடுமென்று அவள்நினைத்தாள்.

உடனே அவள் தன்னைச்சமாளித்துக்கொண்டு, "ஐயா, நீர் அவரை இங்கிருந்து எடுத்துச்சென்றிருந்தால் ஆண்டவரை எங்குவைத்தீர்என்பதைக் கூறும். நான் அவரை எடுத்துச்சென்று விடுகிறேன்" என்றாள்.

பாவம், மதலேனாள்! பெரியவெள்ளிக்கிழமை தொடங்கி மனோவியாகுலமடைய ஆரம்பித்துப் பெரியசனிக்கிழமைக்குள் இளைத்துத் துரும்பாய்ப்போன அவள் அவரை எப்படி எடுத்துச்செல்வாள்? அவள் தனது அன்பின் சக்தியினால் மிகப்பளுவானபாரத்தையும் தூக்கிச்செல்பவள்போல் உறுதியாக நின்றாள்.

யேசு: "மரியே" யெனக் கூப்பிட்டார். அந்தக்குரலானது இடிஇடித்தால் எப்படியோ அதைவிடஅதிகமாக அவளைத் திடுக்கிடவைத்தது. அவள் திரும்புகிறாள். அவருடைய கைகால்களிலுள்ள சிவந்தகாயங்களின் அடையாளங்களைக் கண்ணுற்றதும், "ரபோனி (குருவே)!" என்று ஒரேவார்த்தையில் கூவுகிறாள்.

கிறீஸ்துநாதர்மொழிந்த "மரியே" என்னும் ஒரேவார்த்தையில் மோட்ச இராச்சியம் முழுமையும் நிறைந்திருந்தது. மரியமதலேனா மொழிந்த "ரபோனி" என்னும் ஒருவார்த்தையில் இவ்வுலகமுழுமையும் நிறைந்திருந்தது.

மதலேனாள் கண்ணீர்சிந்தவே தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்தாளேயன்றி, ஆண்டவர் உலகத்தின்குன்றுகளின்மீது நடப்பதைப் பார்ப்பதற்கல்ல. எவ்வாறெனும் ஈஸ்றர்நாளின் உண்மைஇதுவே. மரித்தோரின் உயிர்த்தெழுதல். தோற்றோரின் வெற்றி. காணாமற்போனவர் கண்டுபிடிக்கப்பட்டார். உலகத்தின் வசந்தகாலம், வாழ்வின் விழிப்பு, உயிர்கள் வாழும் உலகிலே உயிர்த்தெழுதலின் முரசொலி.

நமதுஆண்டவரின் மனுஷாவதாரம் பரிசுத்தகன்னிமரியம்மாளுக்கு முதன்முதல் அறிவிக்கப்பட்டது. ஆனால், அவருடைய உயிர்த்தெழுதல் மனந்திரும்பிய மதலேனாளுக்குத்தான் முதன்முதல் அறிவிக்கப்பட்டது.

பரிசுத்தமும், பாவமில்லாமையுமே மகாபரிசுத்த சுதனாகிய சர்வேசுரனை மானிலத்தின்கண் வரவேற்கத் தகுதியுள்ளது. ஆதலின், மாசில்லாத மரியன்னை மண்ணுலகின் வாயிலாகிய பெத்லகேமில் நமதுஆண்டவரை ஈன்றெடுத்தாள்.

ஆனால், மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பிப் பாவத்தின் கல்லறையினின்றும் சர்வேசுரனுடைய புத்தொளியில் புத்துயிர் பெற்றவரே பாவத்தின்மீது அடைந்துகொள்ளப்பட்ட வெற்றியைப் புரிந்துகொள்ளமுடியும். இக்காரணம்பற்றியே அர்ச். கன்னிமரியாளுக்கல்ல—மரியமதலேனம்மாளுக்கு ஆண்டவரின் திருஉத்தானத்தின் சந்தோஷ வெள்ளம் முதன்முதல் கொண்டுவரப்பட்டது.

இந்தமாறுபாட்டில்தான் ஈஸ்றர்நாளின் பெரியதத்துவரீதியான உண்மை மறைந்திருக்கிறது. "பாவிகளின் மனந்திரும்புதலுக்கே திருஉத்தானம்" "நீதிமான்களையல்ல, பாவிகளையே அழைக்கவந்தேன்" என்று ஆண்டவர் கூறியதற்கு இஃதொன்றே சிறந்த சான்றாகும்.

பெண்ணினத்தின் பெருமைக்கு இதோ ஒரு சான்று. பெரிய வெள்ளிக்கிழமையன்று சிலுவைக்கு வெகு அருகில் ஓர்ஸ்திரீ இருந்தாள். ஈஸ்றரன்று காலை கல்லறைக்கு முதன்முதலாக வந்தவளும் அவளே.

(தொடரும்)

---

● தென்பசிபிக் சமுத்திரத்திலுள்ள மாஷல் தீவுகளில் சலவாயுக்குண்டுப் பரீட்சைகள்நடத்த அமெரிக்கா எண்ணியுள்ளதால் நிகழும் சித்திரைமாதம் 20-ந்திகதிக்குப்பின் அத்தீவுகளுக்குச் சமீபமாகச்செல்லாது விலகிச்செல்லும்படி தேசியசீன அரசாங்கம் போர்மோசாக் கப்பல்கள் அனைத்துக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

● ஆதிகாலந்தொட்டு வாழைப் பழத்துக்கு இருந்துவந்துள்ள மதிப்பையும், அது எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது என்பதையும் விபரித்து ஆயிரம் அடிநீளமான சினிமாப்படமொன்றைத் தயாரித்துவருகின்றார். இந்திய சினிமாத்தலைவர் கே. சுபபிரமணியம் அவர்கள். "வாழையின் பெருமை" என்பதுதான் அதன்பெயராகும்.

● மலாய்நாட்டின் காடுகளிலே மறைந்துதிரியும் பயங்கரவாதிகளை எதிர்த்து உபயோகிப்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த இரகசிய ஆயுதம்ஒன்று தம்மிடம்இருப்பதாக அந்நாட்டின் பிரதமரான தெங்கு அப்துல் ரஹிமான் அவர்கள் சென்ற5-ந்திகதி லீனுங்கிலே தெரிவித்திருக்கின்றார். இந்த ஆயுதம் தமதுகையில் இருப்பதாகத் தாம்கருதியபோதிலும் அது என்னவென்பதை இப்பொழுது அவர் வெளியிடமாட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கொலைகார' ஈக்கள்

மனிதனுடன் வாழும் எல்லாப்பூச்சிகளிலும் வீட்டுஈதான் முதலிடம்வகிக்கிறதென்பதில் சந்தேகமில்லை. அதை "மனிதஇனத்தின் இணைபிரியாத தோழன்" என்று சரியாகக் கூறியிருக்கிறார்கள்.

எங்கள்வீடுகளிலும், வீடுகளைச் சுற்றிலும் முக்கியமாகச் சுகாதாரம், சுத்தம் என்னும் சாதாரணவிதிகள் புறக்கணிக்கப்பட்ட இடங்களிலே ஈக்கள்உயிர்வாழ மிகச்சிறந்தநிலைமைகள் ஏற்படுகின்றன. இந்தஇடங்களில் ஈக்கள் உண்ண ஏராளமான உணவும், அவைகள்பெருக மிகச்சிறந்த வசதிகளும் உண்டு. அத்துடன் அழிவுக்கு ஏதுவான இயற்கைக் காரணங்களினின்றும் பாதுகாப்பும் கிடைக்கிறது.

### ஈக்களின் பெருக்கம்

மனிதன் விட்டுச்செல்லும் எத்தனையோவிதமான பொருள்களை ஈ உண்கின்றது. முக்கியமாக மிட்டாய்கள், பால்போன்ற பாதுகாக்கப்படாத உணவுப்பொருள்கள், காயங்களிலிருந்து கசியும்இரத்தம், அழுகியகாய்கறிகள், அழுகிப்போன மிருகங்கள் அல்லது பிராணிகளின்உடல்கள், மிருகங்களின் எச்சம் முதலியவற்றையே ஈக்கள் விரும்பிஉண்கின்றன.

மனிதன் சுகாதாரவிதிகளை அலட்சியம்செய்வதினால் அவனுடைய வீட்டுக்கருகில் குப்பைகூளங்களும், மலசலமும், சகலவிதமான கழிவுப்பொருள்களும் குவிகின்றன. இப்பொருள்கள் ஈக்கள்முட்டையிடுவதற்கு உகந்தனவாயிருப்பதால், ஏற்கனவே அசாத்திய வேகத்தில்பெருகும் வீட்டுஈக்களின் வளர்ச்சிக்கு இவைகள் உதவியாயிருக்கின்றன.

### வியாதிக் கிருமிகள்

ஈ இருவழிகளில் வியாதிக்கிருமிகளை இடத்துக்கிடம் கொண்டுசெல்கின்றது.

(1) ஈ மனிதன்மேல் உட்காரும்போது, தன்உடம்பிலுள்ள உரோமங்களிலும், மயிர்களிலும், முக்கியமாகத் தனது பாதத்தின் அடிப்பாகத்திலுள்ள ஒட்டுமியல்புள்ள அவயவங்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் வியாதிக் கிருமிகளை அவன்மீது பரப்புகின்றது.

(2) பல்வேறு நுண்ணிய கிருமிகளால் பழுதாக்கப்பட்டபொருள்களை உண்டபின் அவற்றைநேரடியாக மனிதன்மேலோ, அல்லது அவனுடைய உணவின்மீதோ, அல்லது தனது எச்சத்தின்மூலமாகவோ பரப்புகின்றது.

### குழந்தைகள்

சீதபேதி, கோடைக்கால வயிற்றுப்போக்கு, விஷபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற சிலவியாதிகளைப் பரப்புவதில் ஈக்கள் முக்கியபங்கு எடுக்கின்றனவென்பதில் ஐயமில்லை. ஏனென்றால், இவ்வியாதிகளை உண்டாக்கும் நுண்ணியகிருமிகள் மலத்தின்மூலம் வெளித்தள்ளப்படுகின்றன. மலத்தில் உட்காரும் ஈக்களின்உடம்பில் வியாதிக்கிருமிகள் ஒட்டிக்கொள்கின்றன. பின்னர், ஈக்கள் இவ்வியாதிக்கிருமிகளை மனிதன் உண்ணும் பாதுகாக்கப்படாத உணவுப்பொருள்களில் கொண்டுவந்து சேர்க்கின்றன.

சீதபேதியைப் பரப்புவதில் ஈக்கள் எடுக்கும்பங்கு அநேகமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஈக்கள் அதிகமாகப் பெருகும் மாதங்களில்தான் சீதபேதி உச்சநிலையடைகிறதென்பது இதற்குத் தக்கசான்றாகும்.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**சதாசகாய மாதாவுக்கு நூருவது நொவினைவிழா:** மட்டக்களப்பு, தாண்டவன்வெளிப் பரிசுத்தவியாகுலமாதா கோவிலில் சதாசகாயமாதாபோரால் புதன்கிழமைதோறும் நடந்துவருகின்ற நொவினைப் பக்திமுயற்சிகளின் நூருவது நொவினைப்பக்திமுயற்சி சென்ற 4-4-56 புதன்கிழமை மிக விமரிசையுடன் நடந்தேறியது. இதற்கு ஆயத்தமாக முந்தியஇருதினங்களிலும் காலை 6 மணிக்குச் சகாயமாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரப்பூசைகள் நிறைவேறின. 4-4-56 புதன்கிழமை காலை 6-30 மணிக்குச சதாசகாய மாதாவுக்குத் தோத்திரமாகப் பாடற்பூசை நிறைவேறியது. மூன்றுதினங்களிலும் அதிகமான விசுவாசிகள் சுத்தபோசனம், ஒருசந்தி, மௌனம்அனுசரித்துப் பூசைகண்டு திவ்வியசற்பிரசாதம் உட்கொண்டனர். பிற்பகல் 4-30 மணிக்கு மாதாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தது. அதன்பின் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளினால் சகாயமாதாவின் மகத்துவத்தை விளக்கிக்காட்டும் இனிமையான ஓர் பிரசங்கம் செய்யப்பட்டது. ஈற்றில் மாதாவின் மாலைஆராதனைபாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. இவ்வைபவங்களின்போது ஏராளமானவிசுவாசிகள் பத்திவேகத்துடனும், மேரைமரியாதையுடனும் பங்குபற்றினார்கள்.

— நிருபர்

---

பால்என்றால், ஈக்களுக்கு விசேஷ பிரியம். சீதபேதியை உண்டாக்கும் கிருமிகள் பெருகுவதற்குப் பால் சிறந்தசாதனமாக இருக்கின்றது. சீதபேதியால் மரணமடையும் குழந்தைகளில் பெரும்பாலானவை ஈக்களினால் அசுத்தம்செய்யப்பட்டபாலை அருந்தியனவாகவே இருக்கின்றன. ஆனால், முலைப்பால்குடிக்கும் குழந்தைகளை இவ்வியாதி சுலபமாகத் தொற்றுவதில்லை.

### சயரோக பீசம்


வீட்டுஈ உண்ணும் அநேகபொருள்களில் சயரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களின் உமிழ்நீரும் ஒன்றாகும்.

ஈக்களின்குடலில் சயரோகபீசத்தின் ஒட்டுநோய்த்தன்மை பாதுகாக்கப்படுவதால், ஈக்களால் அந்நோயைப் பரப்பமுடியும். ஏனென்றால், இத்தகைய சயரோகபீசத்தை உண்டஈக்களுக்கு ஒருபுதுவகையான வயிற்றுப்போக்கு உண்டாகிறது. இதனால், மிகத்துரிதமாக வியாதிக்கிருமிகளை ஈக்களால் பரப்பமுடிகிறது.

ஆனால், ஈக்களின்தொகை குறைக்கப்பட்ட இடங்களிலே தொற்றுவியாதிகளினால் ஏற்படும் பொது மரணங்களும், சிசுமரணங்களும் குறைந்துள்ளனஎன்பதில் சந்தேகமில்லை. சகல சாத்தியமான வழிகளிலும் வீட்டுஈக்களை ஒழிக்கும்இயக்கத்தைத் தொடர்ந்துநடத்துவதன் அவசியத்தை எடுத்துக்காட்ட இந்தமுக்கியமான உண்மை ஒன்றேபோதும்.

அபிவிருத்தியடையாத மக்களிடையே சுறுசுறுப்பாகவும், விவேகமாகவும் பிரசாரஞ் செய்தால்தான் வீட்டு ஈக்களால் மக்களின் ஆரோக்கியவாழ்வுக்கு ஏற்படும்ஆபத்தை அவர்கள் உணர்வார்கள்.

— உ. சு. ஸ்தாபனம்



## பல தேசங்களில்

### அதிகம் பெறுமதி உடையது

அமெரிக்கஜனாதிபதி ஐஸன்ஹாவர் அவர்கள் சென்ற 4-ந் திகதியன்று வாஷிங்டன்நகர விளம்பரச்சபையின் 12-ம் ஆண்டு நிறைவுவிழாவில் பேசியபோது: "வெளிநாடுகளின் உதவிக்காகச் செலவிடப்படும் ஒருடலரானது தேசபாதுகாப்புக்காகச்செலவிடப்படும் ஐந்துடலரைக்காட்டிலும் அமெரிக்காவுக்கு அதிகம்பெறுமதியுடையது; தற்போதைய உலகநிலைமையை அனுசரித்துப் படைகளைப் பெருக்குவதைவிடப்பின் தாங்கியநாடுகளுக்குப்பொருளாதார உதவியளிப்பது எவ்வளவோ அதிகஞ்சிறந்தது. வெளிநாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரேயொருபரிகாரம் ஆயுதஉற்பத்திதான் என்றதீர்மானம் அறியாமையைத்தான் குறிக்கும்; உலகின் ஏனையநாடுகள் வாழ்க்கைத்தரத்திலே குறைந்துகொண்டு போகும்போது அமெரிக்காமாத்திரம் குபேரநாடாக வாழமுடியாது" எனக் கூறியிருக்கின்றார்.

### கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனி

சென்றதைமாதத்திலே கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலிருந்து தப்பியோடிச் சுதந்திர மேற்குஜேர்மனியிற்போய் அடைக்கலம்புகுந்த ஜேர்மனியரான அகதிகளின்தொகை சென்ற 1955-ம்ஆண்டின் தைமாதத்தில் தப்பியோடியவர்களின் தொகையிலும் ஏறக்குறைய இருமடங்காகுமென்று மேற்குஜேர்மனியரின் அகதிகள்மந்திரிசபை அறிக்கையிட்டிருக்கின்றது. சென்றதைமாதம் 25,000 பேருக்கும், 26,000 பேருக்கு மிடைப்பட்ட தொகையானோர் — அதாவது, நாள் ஒன்றுக்கு ஆயிரம்பேர்வரையிலே சென்றதைமாதத்தில் ஜேர்மனியைப் பிரித்துநிற்கும் இரும்புத்திரையினூடாக மேற்குஜேர்மனி போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இத்தொகை முந்தியமார்கழியிலும் 5,000 பேருக்கு, மேற்பட்டோராலே கூடியதாகும். 1955-ம் ஆண்டின் தைமாதத்திலே 14,300 கிழக்குஜேர்மனியர்கள் சுதந்திர மேற்குஜேர்மனிபோய்ச் சேர்ந்திருந்தார்கள். மக்கள்ஆட்சியென்றால் இந்தமக்களெல்லாம் சுதந்திரம்நாடி அங்கிருந்தும் வலசைவாங்கவேண்டிய காரணம்என்ன?

### கட்சியிலிருந்து விலகிய கம்யூனிஸ்தர்

"கம்யூனிஸ்தகட்சியின் நோக்கங்கள் சர்வாதிகாரத்துவமும், அடிமையாட்சியுமே" என்று இத்தாலியிலே பிரஸ்தாபம்பெற்ற ஓர் கம்யூனிஸ்ததலைவரான ஜியுசெப்பி டி ஸ்ரீபானோஎன்பவர் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொண்டு அக்கட்சியிலிருந்து விலகியிருக்கின்றார். இவர்அங்கே சியெற்றிமாகாணத்தில் பிரபலகம்யூனிஸ்த தலைவராயிருந்துவந்தார். தமது இராசினாமாவைப் பற்றி விளக்கமாகத்தெரிவித்து இவர் எழுதிய கடிதம்ஒன்று "பொப்போலோ" என்ற கிறீஸ்துவ ஜனநாயக பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அக்கடிதத்திலே "கம்யூனிஸ்தர்கள் மூந்த மக்களைச் சர்வாதிகாரத்துக்கு இழுத்தெடுத்துப் பிந்த அடிமைகளாக்குகிறார்கள்; ஆனால், நான் ஓர் இத்தாலிய பிரசை; அப்படியிருப்பதை நான்ஒருபோதும் கைவிடமாட்டேன்; நான் காரியதரிசியாய் இருந்துவரும் கம்யூனிஸ்த ஐக்கியஸ்தாபனம் குடிகளை வருத்தும் கொடுங்கோலரின் கூட்டத்தையும் அடக்கியுள்ள" தென இவர் எழுதியிருக்கின்றார்.

* * *

● பலலட்சக்கணக்கான பவுண்பெறுமதியுள்ள பிரித்தானிய கான்பறு வெடிகுண்டு விமானங்களுக்கு இந்தியா ஆடர் செய்திருக்கிறது. இதன்படி 52,40,000 பவுண் பெறுமதியுள்ள சுமார் 30 விமானங்கள் இந்தியாவுக்குக் கிடைக்கவிருக்கின்றன. அதாவது, ஒரு வெடிகுண்டுவிமானம் 1,78,000 பவுண் முடிகின்றது.

● கி. மு. நான்காவது நூற்றாண்டைச்சேர்ந்த அறுபதுக்குமேற்பட்ட சுவரோவியங்களைக் கொண்ட பண்டைக்காலப் புதியகல்லறைஒன்று கண்டுபிடிக்கப் பட்டதையிட்டுப் புதைபொருளாராய்ச்சியாளரும் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளார்களெனச் சென்ற 7-ந் திகதி வத்திக்கானிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இந்தச் சுவரோவியங்கள் நன்குபாதுகாக்கப்பட்ட நிலையிலிருக்கின்றன.

● மகாத்மகாந்தியின் மூன்றாவது புதல்வரான திரு. மணிலால் காந்தி அவர்கள் நெடுநாளாகச் சுகத்தாழ்வுற்றிருந்து சென்ற 5-ந்திகதி தென்னாபிரிக்காவிலே டேர்பன்நகருக்குச் சமீபமான போனிக்ஸில் எனுமிடத்திலே தமது 64-ம் வயதில் காலஞ்சென்றாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இவர் 1916-ம் ஆண்டு தமது சகோதரரான இராமதாஸ்காந்தியுடன் தென்னாபிரிக்காவுக்குச் சென்று அங்குள்ள இந்தியகுடியேற்றதலத்தில் குடியேறியிருந்தார்.

---

**வெளிவந்துவிட்டது!**

கிறீஸ்தவ போதகச்சுருக்கமாகிய

**பெரிய குறிப்பிடம்**

யாழ்ப்பாண மேற்றிராசனத்திற்குட்பட்ட சகல கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் (மேல்வகுப்பு மாணவர்க்கு) உபயோகிக்கப்படவேண்டுமென்று நம்மேற்றிராணியாண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட இச்சமயபாடபுத்தகம் விசுவாசப்பிரமாணம், கிறிஸ்தவ ஒழுக்கம், கிறிஸ்தவ வழிபாடு என மூன்றுகாண்டங்களாக வகுக்கப்பட்டு நவீனமுறையில் அழகிய பதிப்பில் வெளிவந்துள்ளது.

பிரதிவிலை ரூபா 1-75.

தபாற்செலவு பிரத்தியேகம்

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-55 |
| ,, (சிறிது) | ... 3-70 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்க்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-25 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| கன்னியர் ஒழுக்கம் | ... 1-00 |
| திருப்பாடுகளின் மேல் புதுத் தியானங்கள் | ... 1-25 |
| தாவீது இராசாவின் 150 சங்கீதங்கள் | ... 2-60 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம் | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| என்பலி (சங்கீதம் இல்லாமல்) | ... 40 |
| மரியாயின் மைந்தர் பொக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 2-00 |
| கற்பு என் பொக்ஷம் | ... 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன்? | ... 25 |
| புதுநன்மை பட்டத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்கமாதம் | ... 1-65 |
| செந்துகில் (அர்ச். மரியகொறெற்றியின் வாழ்க்கைச்சித்திரம்) | ... 1-60 |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை | ... 1-30 |
| திங்கட்கிழமைப் புதுமை | ... 1-30 |
| தாழ்ச்சிக் கண்ணாடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

*   *   *

**கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்**

| | |
|---|---|
| வேதசாட்சி | ... 1-00 |
| பலித்த கனவு | ... 1-00 |
| தமிழ்த்தூது | ... 3-60 |
| அர்ச். சூசையப்பரின் மகத்துவம் | ... 1-30 |
| அர்ச். சவேரியார் | ... 1-00 |
| தேவப்பிரசைகள் திருச்சரிதை | ... 1-60 |
| அர்ச். சரித்திரம் 4 பாகமும் | ... 12-00 |
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை | ... 1-00 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| அர்ச். வின்சென்ட் தெ பவுல் | ... 1-10 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| அர்ச். சவேரியார் சரித்திரம் | ... 3-25 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| மலரோ மணமோ | ... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |

*   *   *

# எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) | ... 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் | ... 5-00 |
| பைபிள் ,, | ... 5-75 |
| ,, அடையாளமுள்ளது | ... 6-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) | ... 5-00 |
| ,, (தோல்) | ... 7-50 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) | ... 2-50 |
| ,, (தோல்) | ... 3-50 |
| செபச்செண்டு | ... 75 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் | ... 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் | ... 40 |
| நித்திய ஆராதனை | ... 25 |
| இரா ஆராதனை | ... 25 |
| திருமணித்தியாலம் | ... 40 |
| திவ்வியபூசை மகத்துவம் | ... 2-50 |
| பூசை உதவி மந்திரம் | ... 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) | ... 15 |
| வேதாகமவாசிப்பு | ... 90 |
| சற்பிரசாத அன்பன் | ... 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை | ... 2-90 |
| பசாம் ... | ... 1-50 |
| சிலுவைப் பாதை | ... 30 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் | ... 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) | ... 6-50 |
| (பசாமில்லாமல்) | ... 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | ... 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) | ... 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி | ... 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) | ... 90 |
| ,, (Part II) | ... 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் | ... 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் | ... 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) | ... 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் | ... 1-50 |
| நவதின உற்சவம் | ... 75 |
| தருமு அப்பம் | ... 1-00 |
| பத்திச் சபைகள் | ... 20 |
| ஆத்தும தரிசனம் | ... 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் | ... 50 |

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## ST. PATRICK'S COLLEGE, SCHOLARSHIPS.

Applications for Scholarships in H. S. C. classes tenable for one year and subject to renewal, will be received from boys under 18 who have passed the G. C. E. (Ordin. Level) in the first division.

Applications must be forwarded through the Parish Priests and must reach the College office before April 18th.

RECTOR.

## சம்பத்திரிசியார் கல்லூரி
# உபகாரக்கல்வி

எச். எஸ். ஸீ. வகுப்பில் ஒருவருடத்திற்கு உபகாரக்கல்வி பெறவிரும்பும் மாணவர்கள் தங்கள்விண்ணப்பத்தை இம்மாதம் 18-ந்திகதிக்குமுன் கல்லூரித்தலைவருக்குத் தங்கள் கட்டளைக் குருவானவர்மூலமாய் அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றார்கள். விண்ணப்பகாரர் சாதாரண ஜீ. ஸீ. ஈ. (ஆங்கில) பரீட்சையில் முதற்பிரிவில் அரங்கேறியவர்களாயும், 18 வயதுக்கு உட்பட்டவர்களாயும் இருக்கவேண்டும்.

கல்லூரிஅதிபர்.

## நேர்த்தியின் பூர்த்தி

நாங்கள்விரும்பிய ஒருவருக்கு ஓர்நல்ல விவாகம் சீக்கிரம்செய்துவைக்க எங்களுக்கு ஒத்தாசைசெய்யும்படி சதாசகாய மாதாவை இரந்துவேண்டுதல் பண்ணினோம். நாங்கள்கேட்டபடியே மாதா மலைபோல்குறுக்கிட்டு நின்ற விக்கினங்கள் யாவையும் பரிதிமுன்பனிபோல நொடிப்பொழுதில் அகற்றி, நாங்கள்விரும்பியவாறு எல்லாம்நன்மையாய் முடித்துத் தந்தமைக்காக எங்கள்அத்தியந்த பகிரங்க நன்றியைக் காண்பிக்கும்பொருட்டும், சதாசகாயமாதா பேரில் மற்றவர்களும் சிறந்தபக்தியும், நம்பிக்கையும் கொண்டொழுகும்பொருட்டும் நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கின்றோம். இன்னும் இப்புதியகுடும்பத்துக்கு வேண்டியவரப்பிரசாதங்களையும் தந்துதவும்படியும் மாதாவை இரந்துவேண்டுகிறோம். சதாசகாய மாதாவின்புகழ் புவியெங்கும் புகழப்படுவதாக. M. T. L.

## ஜப்பானிய கமத்தொழிலாளர்

கல்லோயாப் பள்ளத்தாக்கிலே 25 ஜப்பானிய கமத்தொழிலாளரைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாய்த் தெரியவருகிறது. இவர்கள் கமத்தொழில்சம்பந்தமாய் இக்காலத்து நவீனமுறைகளிலே அங்குள்ளகமக்காரருக்குப் பயிற்சியளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானிய கமத்தொழிலாளர் ஒவ்வொருவரும் பணஉதவியும், கமச்செய்கைக்கென்று ஐந்துஏக்கர் பள்ளக்காணியும், வசிப்பதற்கென்று ஓர்ஏக்கர் மேட்டுக்காணியும் கொடுக்கப்படுவார்கள்.

● ஐக்கிய அமெரிக்க தேசத்திலும், கனடாவிலும் தற்போது 1,502 கத்தோலிக்கஆஸ்பத்திரிகள் இருந்துவருகின்றன. இவற்றிலே சென்றவருடத்தில் 19 ஆஸ்பத்திரிகள் நவமாகத் திறக்கப்படலாயின.

● யேசுசபையை அடியிட்டவரான அர்ச். லொயலா இஞ்ஞாசியரால் எழுதப்பட்ட சுமார் 6,800 கடிதங்கள் தற்போது பூச்சியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர் தமது சீவியத்தின் கடைசி வருடத்தில் 1,500 கடிதங்கள் எழுதியிருந்தார்.

● பாத்திமாபதியில் நவமாக அமைக்கப்பட்ட வானொலிநிலையம் சமீபத்திலே லீறியாநகர டி சில்வா மேற்றிராணியாராலே ஆசீர்வதிக்கப்படலாயிற்று. காலந்தோறும் அங்கு நடந்தேறும் திருவைபவங்கள் இதன்மூலம் ஒலிபரப்பிவைக்கப்படும்.

# பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

**இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக விசேஷமுறையில் எழுதப்பட்டது.**

**கத்தோலிக்க வாசகம்**

| | ரூ. ச. |
|---|---|
| கீழ்ப் பிரிவு | ... 50 |
| மேற் பிரிவு | ... 50 |
| இரண்டாம் புத்தகம் | ... 60 |
| மூன்றும் புத்தகம் | ... 70 |
| நாலாம் புத்தகம் | ... 80 |
| ஐந்தாம் புத்தகம் | ... 90 |

**கணிதம்**
**(எஸ். ஏ. எற்வேட்)**

**எண் கணிதம்**

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... 1-25 |
| மூன்றும் வகுப்பு | ... 1-50 |
| நாலாம் வகுப்பு | ... 1-75 |
| ஐந்தாம் வகுப்பு | ... 1-90 |
| ஆறும் வகுப்பு | ... 2-00 |
| ஏழாம் வகுப்பு | ... 2-25 |
| எட்டாம் வகுப்பு | ... 2-50 |

**மனக்கணிதம்**

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... 50 |
| மூன்றும் வகுப்பு | ... 60 |
| நாலாம் வகுப்பு | ... 70 |
| ஐந்தாம் வகுப்பு | ... 80 |
| ஆறும் வகுப்பு | ... 1-25 |

**கேத்திர கணிதம்**

| | |
|---|---|
| முதலாம் பாகம் | ... 2-50 |
| இரண்டாம் பாகம் | ... 3-00 |
| மூன்றும் பாகம் | ... 3-00 |

**நவமணி வாசகம்**


| | |
|---|---|
| கீழ்ப் பிரிவு | ... 50 |
| மேற் பிரிவு | ... 50 |
| இரண்டாம் வகுப்பு | ... 60 |
| மூன்றும் வகுப்பு | ... 70 |
| நாலாம் வகுப்பு | ... 80 |
| ஐந்தாம் வகுப்பு | ... 90 |
| ஆறும் வகுப்பு (தற்போது இல்லை) | |
| ஏழாம் வகுப்பு | ... 1-00 |

கிடைக்குமிடம் :

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 12-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருமைச் சகோதரங்களே !

எமது திவ்வியகர்த்தரின் உத்தானம் எங்களுக்குச் சந்தோஷத்தைத் தருகிறது.

அதுஉண்மையென்பதற்குச் சான்றுகள் பலஉண்டு சீஷர்கள் அதை இலகுவாய் ஏற்றுக்கொள்ளவில்லை. யேசுவின் காயங்களைப் பார்த்தபின் விலாக் காயத்தில் கையைவிட்டுப் பார்த்தபின் தான் விசுவசிப்பேன் என்று அர்ச். தோமையார் சொன்னாரல்லவா ? யேசு உண்மையாகவே உத்தானமானார் என்று அறிந்தபின் அவர்கள் அதற்காகத் தங்கள் உயிரையும் தியாகஞ் செய்யத் தயங்கவில்லை.

கிறீஸ்துவின் விரோதிகள் உத்தான உண்மையை மறுக்கவில்லை. அதைப் பரப்ப வேண்டாமென்று சீடரைத் தடுத்தார்கள். அவர்களைக் கசைகளால் அடித்து, மறியலில் வைத்தார்கள் கொலைசெய்தார்கள். ஆனால், அது "பொய்" யென்று சொன்னாரில்லை.

கிறீஸ்துவேதம் உலகமெங்கும் பரம்பினதும் உத்தானத்துக்கு ஒருசாட்சி. அல்லாவிடில் மனிதஇயல்புக்கு மறுப்பானதும், கஷ்டமான கடமைகளைக்கற்பிப்பதும், கண்காணாச் சம்பாவனையை வாக்குப்பண்ணுவதுமான ஓர் மார்க்கம் இவ்வளவாக உலகில் பரம்பினதற்குக் காரணஞ் சொல்லமுடியாது.

உயிர்த்தெழுந்த கர்த்தரை மரியமதலேனாள் கண்டாள்; எம்மாவுசுக்குப் போன இருசீஷர் சந்தித்தனர். சீஷரின் தலைவரான இராயப்பருக்குத் தனியே தரிசனமானார். வேறொரு சமயம் ஐந்நூறு அடியார் ஒரேநேரத்திற் கண்டார்கள். இவர்கள் எல்லாரும் ஏமாந்தார்களென்று சொல்லமுடியுமா ?

ஆகையால் யேசுநாதர் உயிர்த்தெழுந்தது உண்மை. அவர்தமது போதகத்தின் உண்மைக்குச் சாட்சியாக மரித்தபின் உயிர்த்தெழுந்தார். ஆகையால் நாம் அவரில் விசுவாசங் கொள்ளலாம்.

**உங்கள் அன்புள்ள,**

**அண்ணா.**

---

## நிரப்புங்கள்

1. யேசு .......... பின் ........ ......உயிர்த்தெழுந்தார்.
2. மரியமதலேனாள் அவரைச் ...........
3. அவரை ........... என்று எண்ணினாள்.
4. நீர் அவருடைய ........... எடுத்து ஒளித்திருந்தால் ........... என்றாள்.
5. யேசு அவளை ........... என்றழைத்தார்.
6. உடனே ..........யாரென்று அறிந்து ........... என்று கூறி அவர்பாதங்களிற் பணிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகட்டுரை

# உங்கள் ஓய்வுநேரத் தொழில்கள்

வீரர்களே, இது விடுதலைகாலம். ஒரு வழியாக இந்தக் கணிதப் பரீட்சையையும், விஞ்ஞான பாடத்தையும், பூகோளப் பாடத்தையும் எழுதித்தொலைத்து விட்டு உல்லாசமாக உங்கள் லீவுநாட்களை அனுபவித்துக் கொண்டிருப்பீர்கள்.

இந்த நாட்களிலே எந்தெந்த வழிகளிலே தங்கள் ஓய்வு நேரத்தைப் பிரயோகிப்பது என்று தெரியாது உங்களிற் சிலர் திண்டாடிக் கொண்டிருப்பீர்கள். இப்படித் திண்டாடுபவர்களநிலைமை மிகமிக ஆபத்தானது. நரக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கத் துடிதுடிக்கும் நித்திய நரகக்கட்சி அபேட்சகரான சாத்தான் இவர்களுடைய மனத்தொகுதிகளில் தனக்கொரு நிரந்தரமான ஆதரவைத்தேடிப் பெற்றுக்கொள்ளத் தயங்கவே மாட்டான்.

ஆகவே வீரர்களே, உங்கள் அறிவு வளர்ச்சியையும், காலசேப மனப்பான்மையையும் நன்கு விருத்தி செய்யக்கூடிய பொழுதுபோக்குத்தொழில்களில் (Hobbies) உங்கள் விருப்பத்துக்கியைந்த தொழிலைத் தேர்ந்தெடுத்து அவற்றில் உங்கள் மேலதிகமான நேரத்தைப் பிரயோகிப்பீர்களானல் நிரம்பவும் பயனுள்ளதாக இருக்கும்.

பொழுது போக்குத் தொழில்களிலே பலவுண்டு. தபால் முத்திரைகள், புராதன நாணயங்கள் சேர்த்தல், அழகிய வண்ணத்திப் பூச்சிபோன்ற செந்துக்கள், விநோதமான சிறு புல்பூண்டுகள் சேர்த்தல், பலவகைக் காட்சிக் கார்டுகள் (view cards) சேர்த்தல், புகைப்படங்கள் பிடித்தல், சிறுகதையெழுதல், பேனநண்பர்களுக்குக் கடிதமெழுதல் முதலியன இவற்றுட்சில.

சர்வதேச தபாற் தலைகளைச் சேர்ப்பதன்மூலம், நீங்கள் உங்கள் சரித்திர பூமிசாஸ்திர பாடங்களில் அபிவிருத்தி அடைகின்றீர்கள் அவற்றிலிருக்கும் புராதன மடாலயங்கள், சரித்திரப் பிரசித்திபெற்ற கட்டடங்கள், உலகப் பிரசித்திவாய்ந்த கோபுரங்கள், பாலங்கள், நீர்வீழ்ச்சிகள் முதலியனவற்றின் பிரதிமைகள் உங்கள் அறிவைப்பெருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நாணயங்களும் அப்படியே!

விலங்கின தாவரசாஸ்திரங்கள் கற்பதற்கு உதவியாகப் பூச்சிகள்போன்ற சிறியபிராணிகளும், விநோதமான புல்

— "தாரகை" —

பூண்டுகளும் நிச்சயமாக உதவியாக இருக்கும். ஆனல், அநேகர் இவற்றை அழகுக்காகவே சேமிக்கின்றனர்.

பலவகைக் காட்சிக்கார்டுகள் (view cards) இயற்கை எழிலை ரசித்து லயிப்போர்க்கு ஏற்றன. வியூகார்ட்டுகள் சேர்ப்பதுடன் சம்பந்தப்பட்ட புகைப்படமெடுக்குந் தொழிலை மேல்நாட்டினர் ஒரு கலையாகவே கருதிவருகின்றூர்கள். வாழ்க்கையில்குறுக்கிடும் இன்பகரமான — மறக்கமுடியாத சம்பவங்களையும் காட்சிகளையும் படம்பிடித்து அவற்றை அல்பங்களில் சேர்த்துவைப்பது மிகவும் உபயோகமான தொழில். ஆயுள் பூராவும் இப்படங்களைத் திருப்பிப் பார்த்து மகிழ்கின்றனர் பலர்.

சிறுகதை யெழுதலும் ஒருகலையே! உலகமக்களின் வாழ்க்கைத்தரம் எழுத்தாளர்களின் பேனவாலேயே உருவாகின்றன. வாழ்க்கைத்தரம் உயர்வதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வதும் எழுத்தாளர்களாலேயே! எழுத்தாளர் யாவர்க்கும் எழுத்துக்கலை தானகவே உண்டாகுவதில்லை. ஒரு சிலர் விஷயத்தில் இது உண்மையாக இருக்கலாம். ஆனல், பெரும்பான்மையோர் கஷ்டப்பட்டு எழுதியே — அனுப்பும் விஷயதானங்கள் மறுதபாலிலே திரும்பிவந்தும் — சலியாது எழுதியே இன்று எழுத்தாளருலகிலே வெற்றியின் சிகரத்தைஎட்டிப்பிடித்திருக்கின்றனர். எனவே வீரர்களே, நீங்களும் ஏன் முயற்சிசெய்து பார்க்கக்கூடாது? ஓய்வுநேரத்தொழிலாக நீங்கள் இதனை ஆரம்பிப்பினும், இதுஉங்கள் அறிவுவளர்ச்சிச்சாதனமாக இருப்பதுடன், உங்களை ஒரு பொதுசன சேவையாளராக மாற்றிவிடும்.

கடைசியானது, அயல்நாட்டுப் பேனநண்பர்களுடன் தொடர்புவைத்துக்கொள்வதாகும். உலகத்திலேயுள்ள பல்வேறு நாடுகளின் சரித்திரபூர்வ வரலாறுகள், அவைகளது அரசியல், பொருளாதார நிலைமைகள், அங்குள்ள பிரசைகளது பரம்பரைவழக்கங்கள் முதலியனவற்றை அறிவதற்கு நூற்படிப்புமட்டும் போதாது. பல்வேறு நாடுகளிலுள்ள, உங்கள் வயதுள்ள இளம்பிரசைகளுடன் கடிதத்தொடர்பு வைத்துக்கொண்டால் பிரஸ்தாப விஷயங்களைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ளலாம்.

வீரர்களே, உங்கள் ஓய்வுநாட்களை உபயோகமான முறைகளிலே செலவழிப்பதற்கு மேலே கூறப்பட்டுள்ள சாதனங்கள் தகுந்தன. வீரர்களிற் சிலர் ஏற்கனவே இத்தகைய ஓய்வுநேரத்தொழில்களில் (hobbies) ஈடுபட்டிருப்பார்கள். ஏனைய வீரர்கள் இந்த ஓய்வுநாட்களில் இத்தகைய தொழில்களில் ஈடுபடுவது நிரம்பவும் நன்ருக இருக்கும். வீரர்கள் இந்த ஓய்வுநேரத்தொழில்களுக்கு ஆதரவுதந்து இவைகளைப்பற்றிப் "புனித வீர" ரில் எழுதுவது அநேக வீரருக்கு உபயோகமுள்ளதாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

* * *

குறிப்பு: "தாரகை" உதித்ததையிட்டு அண்ணு ஆனந்தமடைகிருர். புனிதவீரரை ஊக்குவிக்கும் இத்தகைய விடயங்களுக்கு எப்போதும் ஆதரவுண்டு.

—— ✻ ——

## கபிரியேல் தேவதூதன் மரியாயைச் சந்தித்தல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மரியாய் தன்மைத்துனி வீட்டை அடைந்ததும், எலிசபெத் உரத்தசத்தமாய்: "ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய திருஉதரத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டவராமே" என்று மரியாயைப் புகழ்ந்தாள்.

ஏன் மரியாய் ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளானுள்? முதலில் மனிதவர்க்கத்தில் அவள் ஒருத்தியே ஜென்மபாவம் இல்லாமல் பிறந்தாள். வரப்பிரசாதங்கள் நிறைந்து மாசில்லாமல் உற்பவித்தாள். இதைவிட அதிமுக்கியமான காரணம் யாதெனில், சகல ஸ்திரிகளுக்குள்ளேயும் இரட்சகரின் தாயாராய் இவள் தெரிந்தெடுக்கப்பட்டதே. இவவின் மகிமையைவிட இவ்வுலகில் வேறெந்த மகிமையும் பெரிதல்ல. எலிசபெத் இவ்வார்த்தைகளையும் கூறினுள்: "உம்முடைய திருஉதரத்தின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டதாமே." இதன் அர்த்தம்: "கனியாகிய யேசுவும் ஆசீர்வதிக்கப் பட்டவராமே." தனது புத்திரன் யேசுவைப்பற்றி எலிசபெத் கூறியதையிட்டு மரியாய் சந்தோஷித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள். பிரியதத்தமந்திரத்திலும் நாங்கள் இதே வார்த்தையைச் சொல்லும் போதும் மரியாய் சந்தோஷப்படுகிறாள். நாம் அதை அடிக்கடி சொல்லிவருகிறோமா? இன்னும் நாங்கள் அந்தச் செபத்தைப் பயபக்தியாய்ச் சொல்லி வருகிறோமா?

## தேவனின் தாய்

சிலமாதங்கள் கழிந்தன. எலிசபெத்தின் வீட்டில் வேலையை முடித்துக் கொண்டு மரியாய் தனது சொந்த ஊராகிய நசரேத்துக்குச் சென்றாள். இந்த நாட்களில்தான் யோசேப்புவுக்கும் மரியாய்க்கும் கலியாணவைபவம் நடந்தேறியது. நசரேத்திலிருந்து குடிசனக் கணக்கு எடுப்பதற்காக பெத்லகேமுக்குப் போகும்படி அரசனிடம் இருந்து அழைப்புவந்தது. பெத்லகேம், ஜெருசலேம் பட்டணத்திலிருந்து 50 மைலுக்கு அப்பால் உள்ள ஒருசிறியநகரம். பிரயாணம் மூன்றுநாட்கள் எடுக்கும். போக்குவரவு செய்வதற்கு மிகவும்கஷ்டமானது. மரியாயும், யோசேப்பும் பெத்லகேம்நகரை அடைந்ததும் களைத்துப் போனார்கள். அநேகவீடுகளில் தங்குவதற்குஇடங்கேட்டு ஒருஇடமும் அகப்படவில்லை. அவர்கள் எங்கே போவார்கள். சிறிது நேரத்துக்குப்பின் யோசேப்பு ஒருகுகையைக் கண்டுபிடித்தார். பெத்லகேம் மலைச்சாரலில் சிறிய அளவில் அது அமைந்திருந்தது. அந்த இரவை அதில் செலவழித்தார்கள். இங்கேதான் இரவின் அமைதியான வேளையில் யேசு இரட்சகர் பிறந்தார். மரியாள் அவரைக் கந்தைத் துணிகளால் போர்த்துக் குடிலில் வைத்திருந்தாள். தேவகுமாரனுக்கு வைக்கோலே பஞ்சணையானது. ஆனல், மனிதரின் பிள்ளைகளுக்கு என்ன ஆனந்தமானநாள். பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குமுன் நடந்த முதல் கிறிஸ்மஸ்விழா இதுவே.

"அர்ச்சியசிட்ட மரியாயே, சருவேசுரனுடைய மாதாவே" என்று நாம்சொல்லும்போது குடிலின் முன்னிட்டியில் பாலன்கிடக்கிறதையும் மரியாய் அவரருகில் முழந்தாளில் இருக்கும் காட்சியையும் நாம் தியானிக்கின்றோம்.

## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மரியாய் யேசுவின் தாய். யேசுநாதர் கடவுளாய்இருப்பதினல் அவவை சருவேசுரனுடையமாதா என்கிறோம். ஆனல், அவர் எங்களுடைய தாயாகவும் நாங்கள் அவவின் பிள்ளைகளாகவும்இருக்கிறோம். மரியாய் யேசுவை நேசிக்கவில்லையென்று ஒருவரும் கூறமாட்டார்கள். அவள் அவரை எம்மட்டாக நேசித்தாள். தன் முழு இருதயத்தோடும், நல்மனதோடும், ஆத்துமத்தோடும், முழுப்பெலத்தோடும் அவரை நேசித்தாள். யாருக்காக இரட்சகர் இவ்வுலகிற்கு வந்தாரோ அவர்களை எல்லாம் மரியாய் நேசிக்கிறாள். அவர்எல்லாரையும் இரட்சிப்பதற்காக வந்தார். அவள்தன் நேசகுமாரன் யேசுவோடு நெருங்கி இருந்ததுமன்றி இப்போதும் அவரருகில் இருக்கிறாள். தாயானவள் தன்மகனேடே எப்படிக் கதைப்பாளோ அதேபோல் மரியாயும் யேசுவுடன் கதைக்கிறாள். அவரிடம் இருந்து ஒருவராலும் பெறமுடியாத வரங்களை மரியாய் பெற்றுத்தருவாள். இதற்காகத்தான் நாங்கள் அவவை "எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" எனக் கேட்கிறோம்.

---

கோயிலுக்குள் கதைப்பது ஆண்டவருக்கு அநாசாரம், அயலானுக்குப் பராக்கு, எமக்குப் பயனற்றது.

"என்வீடு செபத்தின் வீடு"

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

**"அண்ணு", சஞ்சூசையப்பர் தாபனம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org